# வானவில்

# VAANAVIL

| இதழ்127 | ஆடி | 2021 |
|---|---|---|
| ISSUE 127 | JULY | 2021 |


# அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது?

2019இல் நடைபெற்ற இலங்கை ஜனாதிபதி தேர்தலிலும், 2020இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் தற்போதைய அரசாங்கக் கட்சியினர் மக்களின் அமோக ஆதரவைப் பெற்று ஆட்சிபீடம் ஏறினர். வழமையாக முற்போக்கு – ஜனநாயக சக்திகளுக்கு எதிரான ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு ஆசனத்தைக்கூட வெல்ல முடியாது வரலாற்றில் முதல் தடவையாகத் தோல்வியடைந்தது.

அதேவேளை, நாட்டு மக்கள் இன்றைய அரசாங்கத்திடம் பல ஆக்கபூர்வமான செயல்திட்டங்களை எதிர்பார்த்தனர். ஆனால் அவர்களது எதிர்பார்ப்புகள் கானல் நீராகிப் போய்விடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

முதலாவது காரணம் பெரும் பெரும் வளர்ச்சி அடைந்த நாடுகளையே உலுக்கிப் போட்டுள்ள கொரோனா என அழைக்கப்படும் கொவிட் - 19 தொற்று நோயாகும். இந்த நோய் காரணமாக இலங்கைக்கு அதிக வருவாய் ஈட்டித்தந்த சுற்றுலா பயணத்துறை முற்றிலுமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. அதுமாத்திரமின்றி இந்த நோய்த் தாக்கம் காரணமாக நாட்டிலுள்ள தொழில்துறை, விவசாயத்துறை, மீன்பிடித்துறை, கல்வித்துறை, நிர்வாகத்துறை, ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் என எல்லாத்துறைகளுமே முடங்கிப் போயுள்ளன.

இந்தப் பேரிடருக்கு மத்தியிலும் சர்வதேச சமூகம் எனப்படும் அமெரிக்கா தலைமையிலான மேற்கத்தைய முதலாளித்துவ நாடுகள் இலங்கையில் நடந்து முடிந்த உள்நாட்டு யுத்தம் சம்பந்தமாக தொடர்ந்தும் ஒருதலைப்பட்சமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருவதுடன், தற்பொழுது




புதிதாகவும் அங்கு மனித உரிமை மீறல்களும், ஊடக சுதந்திர மறுப்பும், சிறுபான்மை இனங்களுக்கு எதிரான பாரபட்சங்கள் அடக்குமுறைகளும் நிகழ்த்தப்படுவதாக குற்றம்சாட்டி வருகின்றன. அவர்களது ஒரே நோக்கம் 2015இல் நடைபெற்றது போன்ற ஆட்சி மாற்றம் ஒன்றை இலங்கையில் கொண்டு வருவதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

கடந்த மார்ச் மாதம் நடந்த ஜெனிவா மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தொடரில் மேற்கின் பலம் வாய்ந்த நாடுகள் சின்னஞ்சிறிய இலங்கைக்கு எதிராக ஓரணியில் திரண்டு நின்று கொண்டு வந்த கண்டனத் தீர்மானத்தில் இருந்தே இதை விளங்கிக் கொள்ளலாம்.

முன்னைய சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசின் மீதும், தற்போதைய சிறீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசின் மீதும் மேற்கத்தைய சக்திகள் காட்டமாக நிற்பதற்கு சில காரணங்கள் இருக்கின்றன.

அதில் ஒரு காரணம், மேற்கத்தைய சக்திகளால் இலங்கையின் இறைமைக்கு மட்டுமின்றி, தென்னாசியாவின் இறைமைக்கே சவால் விடக்கூடிய வகையில் உருவாக்கி விடப்பட்டிருந்த புலிகள் என்ற பாசிஸ இயக்கத்தை அன்றைய மகிந்த ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்கம் வெற்றிகரமாக தோற்கடித்து நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டிமையாகும். குரங்கு அப்பம் பங்கிட்ட கதை போல நோர்வேயைச் சேர்ந்த சோல் ஹெய்ம் என்ற அரசியல் தரகர் மூலம் இலங்கையின் இனப் பிரச்சினையையும், இறைமையையும் சிக்கலுக்கு உள்ளாக்க அந்நிய சக்திகள் போட்டிருந்த திட்டத்தை மகிந்த அரசு தனது சொந்தப் பலத்தின் மூலமும், சில நட்பு நாடுகளின் உதவியுடனும் முறியடித்ததை இந்த அந்நிய சக்திகளால் தாங்கிக்கொள்ள முடியாமல் இருப்பதால்தான் ஜெனிவா நாடகம் திரும்பத் திரும்ப அரங்கேற்றப்படுகிறது என்பதில் சந்தேகம் இல்லை.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

**நூறு சிந்தனை மலரட்டும்**

# 1983 ஜூலை இனவன்செயல்களை நினைவு கூர்வது சரி, குற்றவாளிகள் எங்கே?

**தெ**ன்னிலங்கையில், குறிப்பாக கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட இனவன்செயல்கள் இடம்பெற்று 38 வருடங்கள் கடந்து விட்ட போதிலும், 1983 ஜூலை வன்செயல்களை தமிழ் மக்கள் மாத்திரமல்ல, இலங்கையின் ஏனைய இனமக்களும் ஒருபோதுமே மறந்து விடப் போவதில்லை. ஏனெனில் இந்த இனவன்செயல் ஏற்படுத்திய விளைவுகளுக்கு இலங்கையின் அனைத்து மக்களுமே இன்னமும் பாரிய விலையைச் செலுத்திக்கொண்டு இருக்கின்றனர்.

1983 இற்கு முன்னர் 1958, 1977 ஆம் ஆண்டுகளிலும் தமிழ் மக்களுக்கு எதிரான இனவன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. எனினும் முன்னைய இரண்டு இனவன்செயல்களைக் காட்டிலும் 1983 ஆம் ஆண்டு இனவன்செயல் இலங்கை வரலாற்றில் அழியாத இடம்பெற்று விட்டது. அத்துடன் இலங்கையில் 26 ஆண்டுகாலம் நீடித்த உள்நாட்டு யுத்தத்திற்கும் இதுவே கால்கோளிட்டது.

1983 ஆம் ஆண்டு ஜூலை 23ம் திகதியன்று யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் இராணுவத்தினரை இலக்கு வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலையடுத்து, 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டார்கள். இந்தச் சம்பவமே 1983 ஜூலையில் இனவன்செயல்கள் மூளக்காரணமாக அமைந்ததென சொல்லப்பட்டு வருகின்றதென்ற போதிலும், இவ்வாறானதொரு சம்பவத்தை எதிபார்த்துக் காத்திருந்து அரசியல்வாதிகள் காரியத்தை நடத்தி முடித்தார்கள் என்பதே உண்மை.

இறந்த இராணுவவீரர்களின் உடல்கள் அவரவர் குடும்பங்களிடம் வழங்கப்பட்டு இறுதிக்கிரியைகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசு, அந்த உடல்களை ஜூலை 24ஆ திகதி கொழும்பிற்கு விமானம் மூலம் கொண்டுவந்து, கனத்தை மயானத்தில் இறுதிக்கிரியைகளை நடாத்த ஏற்பாடு செய்தது. அந்த இறுதிக்கிரியைகளை பிரமாண்டமாக நடத்துவதற்காகவும், அதன் பின்னர் தமிழர்களையும் அவர்கள் உடமைகளையும் தாக்கியழிப்பதற்காகவும் திட்டமிடப்பட்டு, அரச வாகனங்களில் ஏராளமானவர்கள் கொழும்பிற்கு அழைத்து வரப்பட்டு இனவன்முறைகளை கச்சிதமாக நிறைவேற்றியது ஜே.ஆர். தலைமையிலான ஐ.தேக. அரசு.

இராணுவவீரர்களின் இறுதிக்கிரியைகளின் பின்னர் கனத்தை மயானத்திலிருந்து புறப்பட்ட காடையர்கள், தொடர்ந்து 3 அல்லது 4 நாட்களாக கொழும்பு நகர் மற்றும் புறநகர் பகுதிகளை மொத்தமாக தங்கள் கைவசப்படுத்தி சகல அட்டூழியங்களையும் புரிந்தனர். கொழும்பு நகரைச்சுற்றி தமிழர்களுக்கு எதிரான மிக மோசமான வன்செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த அதேவேளையில், கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராகவும் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன. ஜூலை 25, 27 ஆகிய இரு நாட்களில் குட்டிமணி, தங்கத்துரை உட்பட 53 பேர் வெலிக்கடைச் சிறையிலுள்ள சக சிங்களக் கைதிகளால் கொல்லப்பட்டார்கள்.

இதற்கிடையே கொழும்பிற்குள் புலிகள் ஊடுருவியுள்ளார்கள், யாழ்ப்பாணத்தில் புத்தவிகாரை தாக்கப்பட்டு பௌத்தபிக்கு கொல்லப்பட்டார் போன்ற வதந்திகளைப் பரப்பி தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டன. இலங்கையில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு ஜே.ஆர் அரசும் பாதுகாப்புப் படைகளும் முன்வரவில்லை. மாறாக, கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன. தொடரும் இனவன்செயல்களை நிறுத்த பொறுப்பு வாய்ந்த அரசு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்காதிருந்தது என்பது, இதன் பின்னணியில் அரசாங்கம் இருந்தது, ஏற்கனவே நன்கு திட்டமிடப்பட்டது போன்றவற்றை உறுதிப்படுத்தியது. அத்துடன் இந்த இனவன்செயல்கள் திருநெல்வேலியில் இராணுவம் மீதான தாக்குதலின் எதிர்வினை அல்ல என்பதையும் தெளிவுபடுத்தியது.

கொழும்பு மற்றும் தென்னிலங்கையின் ஏனைய பாகங்களிலும் மலையகத்திலும் ஜூலை 24 இலிருந்து ஜூலை 31 வரை நீடித்த இனவன்செயல் தாக்குதல்களில் குறைந்தது 2000 பேராவது கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. பல ஆயிரக்கணக்கானோர் காயமுற்றும், மேலும் பல ஆயிரக்கணக்கானோரின் சொத்துக்களும் உடமைகளும் சூறையாடப்பட்டும், ஒன்றரை இலட்சம் பேர் வரையில் அகதிகளானார்கள். இந்த அகதிகளில் பெரும்பாலானவர்கள் இந்தியா அனுப்பி வைத்த கப்பல்களில் கொழும்பிலிருந்து காங்கேசன்துறையில் வந்திறங்கினார்கள்.

தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவன்செயல்களையும் சிறைச்சாலைப் படுகொலைகளையும் பெரும்பான்மையினத்தவரின் தன்னெழுச்சியான செயற்பாடுகளாக அப்போதைய ஐ.தே.க. அரசும், அதற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்களும் உலகிற்கு காட்ட முயன்றாலும் ஆட்சியிலுள்ளவர்களின் அனுசரணையில்லாமல் தலைநகரில் ஓர் இனத்திற்கெதிராக பேரழிவினை நிகழ்த்த முடியாது என்பதே உண்மை.

38 வருடங்களிற்கு முன்னர் இழைக்கப்பட்ட பாரிய குற்றங்களிற்கு பொறுப்பானவர்கள் எவருமே சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டது கிடையாது. ஆனால் பல குற்றவாளிகள், குற்றம் புரிந்தவர்களைத் தெரிந்தவர்கள் பலர் இன்னமும் உயிரோடுதான் இருக்கிறார்கள். 1983 இல் ஐ.தே.க. அரசில் ரணில் விக்கிரமசிங்க அமைச்சராக இருந்தவர் என்பதை இங்கே நினைவுபடுத்தி, குறிப்பிட்டேயாக வேண்டும். மேலும் இவர் இலங்கையின் பிரதமராக மூன்று தடவைகள் பதவி வகித்து, தற்போது தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருக்கிறார். அத்துடன் இவர் தமிழ் தேசியக்கட்சிகளின் ஆத்ம நண்பரும் கூட. இவர் அப்போது அமைச்சராக பதவி வகித்தார் என்ற ஒரோயொரு காரணத்திற்காக இனவன்செயல்களுடன் நேரடியாக சம்பந்தப்படுத்த முடியாது. எனினும் குற்றவாளிகளை அறியாத அப்பாவியாக அவர் இருப்பார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. 1983 ஆம் ஆண்டு இனவன்செயல்களை கறுப்பு ஜூலையென வருடா வருடம் கொண்டாடிவரும் தமிழ் தேசியவாதிகள், நண்பர் ரணில் மூலமாக, வன்செயல்களின் மூலகர்த்தாக்களை அம்பலப்படுத்தாமல் ஏன் இன்னமும் இருக்கிறார்கள்?

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# ஹிஷாலினி: மலையகத்தின் இன்னுமொரு அவலக்கதை

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய ரிஷாத் பதியுதினின் இல்லம் கொழும்பு பௌத்தலோகா மாவத்தையில் அமைந்துள்ளது. இவரது இல்லத்திற்கு, கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்டோபரில் ஹட்டன், டயகம 3ம் பிரிவில் இருந்து 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ந திகதி பிறந்த ஜூட் குமார் ஹிஷாலினி என்ற சிறுமி வீட்டுப் பணிப்பெண்ணாக சென்றுள்ளார். இவர் ஜூலை 3ந திகதி எரிகாயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், ஜூலை 15ந திகதி சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

ரிஷாத் பதியுதீனும் அவரது சகோதரரும் 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்புகளுடன் தொடர்புடையவர்களுக்கு உதவினார்களெனக் குற்றம் சாட்டப்பட்டு, ஏப்ரல் 24ந திகதி கைது செய்யப்பட்டு, தற்போது பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் (PTA) கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த சிறுமி நீண்ட காலமாகவே பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக நடத்தப்பட்ட பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சரிடம் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ள போதிலும், அவர் திடீர் சுகயீனமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமையினால் மருத்துவ ஆலோசனைக்கமைய விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சிறுமியை ரிஷாத்தின் இல்லத்திற்கு டயகமவிலிருந்து அழைத்து வந்த நபர், ரிஷாத்தின் மனைவி, மனைவியின் பெற்றோர்கள் ரிஷாத்தின் இல்லத்தில் பணி புரியும் ஏனைய வேலையாட்கள் மற்றும் ஹிஷாலினி குடும்பத்தினர் உள்ளிட்ட பலரிடம் விசாரணைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

குடும்ப வறுமை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக பெருந்தோட்டங்களைச் சேர்ந்த பெற்றோர்கள் பிள்ளைகளை படிக்க வைப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் படிப்பை



இடைநிறுத்தி, இவர்களை கொழும்பிற்கும், நாட்டின் இதர பகுதிகளுக்கும் வீடுகளில் வேலை செய்வதற்காக பெற்றோர்கள் அனுப்பி வைக்கின்றனர். இந்நிலையில் அவர்கள் தாங்கள் வேலை செய்யும் இடங்களில் பல்வேறு துன்பங்களுக்கும், இழப்புக்களுக்கும் ஆளாவதுடன் மிகுந்த நெருக்கடிகளையும் சந்தித்து வருகின்றனர். இருந்த போதிலும் தம்மை நம்பியுள்ளவர்களுக்காக எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு வேலை செய்வதைத் தவிர, ஏனோ அவர்களுக்கு வேறு வழிகள் எதுவுமிருப்பதில்லை.

இவ்வாறு வீடுகள் மற்றும் வேலைத்தலங்களில் பணிபுயும் போது குறிப்பாக பெண் பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள் குறித்து ஊடகங்கள் அவ்வப்போது சுட்டிக் காட்டி வருகின்ற போதும், அவை குறித்து பெற்றோரகள் பெரிதாக கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. பல்வேறு சந்தர்ப்பங்களில் தோட்டப்பகுதியில் உள்ள முகவர்கள் அங்குள்ள சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் யுவதிகளை கொழும்புக்கும் மற்றும் இதர இடங்களுக்கும் ஆசை வார்த்தைகள் கூறி அனுப்பி வைத்து பணம் சம்பாதித்து வருகின்றனர். பல சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் முகவர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி தமது சொந்தப் பிள்ளைகளைப் படிக்கவிடாது துன்பத்தில் தள்ளுகின்றனர். ஹிஷாலினிக்கு நேர்ந்தது போன்ற எத்தனையோ சம்பவங்கள் பகிரங்கத்திற்கு வராமல் நாட்டில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

மஸ்கெலியா, லக்ஷபான தோட்டம் மேல் பிரிவைச் சேர்ந்த சுமதி (வயது 17), ஜீவராணி (வயது 16) ஆகிய இருவரினதும் சடலங்கள் 2009 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 14ந திகதி கொழும்பு பௌத்தலோக மாவத்தை பகுதியில் கழிவு நீர் கால்வாய் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டது அப்போது மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டது. இவர்களும் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டே கொல்லப்பட்டார்கள். இந்த இருவரினது மரணத்துடன் சிறுமியர்களை வீட்டு வேலைக்கு அமர்த்தப்படும் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படலாம் என்றே பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் மலையக சிறுவர்களுக்கு எதிரான கொடுமைகள் அவ்வப்போது பகிரங்கத்திற்கு வருவதும், பின்னர் அடங்கிப்போகும் கதையாகவே தொடர்கின்றது.

சிறுவர்களின் கற்றல் செயற்பாடுகள் இடைநிறுத்தப்படுவதுடன், அவர்கள் பணிக்கமர்த்தப்படுகின்றனர். இவ்வாறு அவர்கள் தங்களது இளம் வயதிலேயே பணிக்கமர்த்தப்படுகின்றமை காரணமாகவே இவ்வாறான அனர்த்தங்களுக்கு முகங்கொடுகின்றனர். எனவே முதலில் முகவர்கள் ஊடாக சிறுவர்கள் பணிக்கமர்த்தப்படுகின்ற செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். சிறுவர்களை பணிக்கமர்த்த முயலும் முகவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது சிறுவர்களின் அனைத்து உரிமைகளையும், விசேடமாக அவர்கள் தங்கள் எதிர்காலத்தை அமைத்துக் கொள்ளுவதற்கான அத்தியாவசியமான கல்வி என்னும் உரிமையையும் பாதிக்கிறது என்பதால் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிராக தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபை குரல் எழுப்பி வருகின்றது. இதனால் ஐ.நா. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிரான உலக தினமாக ஜூன் மாதம் 12ந திகதியைப் பிரகடனப்படுத்தப்படுத்தியுள்ளது. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிராக, இலங்கையில் 18 வயதுக்கு உட்பட்டோருக்கு கட்டாயக்கல்வி போன்ற பல சட்டங்கள் நடைமுறைப்படுத்தாதுள்ள நிலையில், ஐ.நாவால் இலங்கையின் மனச்சாட்சியை தட்டியெழுப்ப முடியுமா?

# ‘இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வொன்றினை இலங்கையர்களே காண வேண்டும். வெளிநாட்டவர்களால் இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வொன்றினைக் காணமுடியாது.’

**- எரிக் சொல்ஹெய்ம்**

***1998* முதல் *2005* வரை இலங்கையில் சமாதான முன்னெடுப்புகளுக்கு பிரதான அனுசரணையாளராக செயற்பட்ட நோர்வேயைச் சேர்ந்த முன்னாள் சமாதான பேச்சுவார்த்தையாளரான எரிக் சொல்ஹெய்ம், இலங்கையிலிருந்து வெளியாகும் டெய்லி மிரர் பத்திரிகையுடன் சமீபத்தில் நடாத்திய உரையாடல். ருவிட்டரில் விவாதத்தைப் பின் தொடர்ந்தவர்கள், இந்த நேரடி டிஎம் ருவிட்டர் (DM Twitter) வெளி ஒளிபரப்பின்போது, கேள்விகளை முன்வைக்கவும் நேரடியாக சொல்ஹெய்முடன் தொடர்பாடல் கொள்ளவும் தனித்துவமான வாய்ப்பைப் பெற்றிருந்தனர். கலந்துரையாடலின் பகுதிகள்:**

**கேள்வி: இலங்கையில் சமாதான முன்னெடுப்புகளினுடைய சாராம்சம் என்ன?**

**எரிக்:** *1998*இல் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதான முன்னெடுப்புகளில் மூன்றாவது தரப்பினராக நோர்வேயை அணுகினார்கள். அவர்கள் வேறு வழிகள் பற்றியும் விவாதித்தனர், எனினும் நோர்வேயுடன் நின்று கொண்டனர், நோர்வே இலங்கையில் எந்தவித குறிப்பிடக்கூடிய நலன்களும் எதுவுமில்லாத மற்றும் இரு தரப்பினர்களுக்கும் ஏற்புடைய ஒரு தொலைதூர நாடு என்பதே அதற்கான முக்கிய காரணமாகும். அத்தோடு முக்கியமாக இந்தியாவுக்கும் இலங்கையில் வேறு சில முக்கிய வெளிநாட்டு தரப்பினர்களுக்கும் ஏற்புடையதாகவும் நோர்வே இருந்தது.

முதல் இரண்டு வருடங்களாக அனைத்தும் முற்றுமுழுதாக கொழும்பில் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. (ஜனாதிபதி) சந்திரிகா மற்றும் அப்போதைய வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் ஆகியோர் மாத்திரமே புலிகள் தரப்பில் மேற்கொண்ட முயற்சிகள் பற்றி அறிந்திருந்தனர். ஆனால் *2000* ஆம் ஆண்டில் சந்திரிகா புலிகளால் தாக்கப்பட்டு, அவர் கிட்டத்தட்ட கொல்லப்படும் நிலைமை உருவாகிய பின்னரே, அவர் முன்னோக்கிச் சென்று நோர்வேயின் பாத்திரத்தினை பகிரங்கப்படுத்தினார். *2001* மற்றும் *2002*



இல் நாங்கள் போர் நிறுத்த உடன்படிக்கையை செய்தோம். முதல் இரண்டு ஆண்டுகளாக நம்பவே முடியாத அளவிற்கு அது வெற்றிகரமாகவே இருந்தது. இரு தரப்பிலும் எவரும் கொல்லப்படவில்லை.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சுயாட்சி தீர்வொன்றினை இரு தரப்பினரும் ஆராய்வார்கள் என்று சொல்லப்படும் ஒஸ்லோ பிரகடனம் என அழைக்கப்பட்ட உடன்பாடு எட்டப்பட்டது. இது நடந்தபோது புலிகள் தமது அதிகாரத்தின் உச்சநிலையில் இருந்தார்கள். புலிகள் பலவீனமான நிலையில் இருந்ததால்தான், அவர்கள் சமாதான முன்னெடுப்புகளுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு அதனைச் செய்ததாக, கொழும்பில் உள்ள பெரும்பாலான மக்கள் கூறினார்கள். ஆனால் புலிகள் அப்போதுதான் ஆனையிறவு இராணுவ முகாமினை கைவசப்படுத்திக் கொண்டு, யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து இலங்கை இராணுவத்தை அகற்றுவதற்கு மிக, மிக நெருக்கமாக இருந்தார்கள். விமான நிலையத்தின் மீதான தாக்குதல்கள் இலங்கை பொருளாதாரத்தினை முடக்கக்கூடிய நிலைமைகளை ஏற்படுத்தியிருந்தன. எனவே புலிகள் சமாதான முன்னெடுப்புகளை ஆரம்பித்த போது, தமது அதிகாரத்தின் உச்சக்கட்டத்தில் இருந்தார்கள்.

படிப்படியாக சமாதான முன்னெடுப்புகள் தகர்ந்ததுடன், இரு தரப்பிலும் கொலைகள் அதிகரிக்கத் தொடங்கின. ஆனால் புலிகள் அரசதரப்பை விட அதிகமான கொலைகளைச் செய்தார்கள். மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, ஆரம்பத்திலிருந்தே வீதியோர வெடிகுண்டுகள் மூலம் புலிகள் அவரது தலைமையை சீர்குலைக்கத் தொடங்கினர். மஹிந்த தெரிவு செய்யப்படுவதினை புலிகள் சாத்தியமாக்கினர்.

ஆரம்பத்திலிருந்தே பிரபாகரன் மிகவும் வெற்றிகரமானதொரு இராணுவத் தலைவராக இருந்தார், ஆனால் ஓர் அரசியல் தலைவராக அவ்வளவு வெற்றிகரமானவராக இருக்கவில்லை. அவர் தவறுக்கு மேல் தவறாகச் செய்யத் தொடங்கினார், கொலைகாரர் படையொன்றினைக் காட்டிலும், ஒரு மரபுசார்ந்த இராணுவத்தைப் போலவும் செயற்படத் தொடங்கினார். போரின் முடிவில் இரு தரப்பினரும் போர்க்குற்றங்கள் புரிந்தனர் என்பது மிகவும் தெளிவாக உள்ளது என நான் நினைக்கிறேன். புலிகள் தமது உறுப்பினர்களைக் காப்பாற்றுவதற்காக மக்கள் திரளினரை பிணையக் கைதிகளாக வைத்திருந்தனர். அதே நேரத்தில் இலங்கை ஆயுதப் படைகள் மக்கள் அடர்த்தியாக இருந்த பகுதிகளில் குண்டுவீசி, மருத்துவமனைகள் போன்ற சிவில் நிறுவனங்களை இலக்கு வைத்தார்கள். இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச மனித உரிமைகள் ஆணையங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால் பாரிய போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டன என்பது மிகவும் தெளிவாக உள்ளது என்று நான் நினைக்கிறேன்.

**கேள்வி: அரசியல் தீர்வொன்றினை அடைவதில் சிக்கலாக இருக்கின்ற இலங்கை அரசியல் தலைமைகளிடையேயான தொலைநோக்குப் பார்வை இல்லாமை பற்றி நீங்கள் பேசினீர்கள். நீங்கள் இதுபற்றி விரிவாகக் கூற முடியுமா?**

**எரிக்:** அந்த நேரத்தில் கொழும்பில் இருந்த இரண்டு பிரதான அரசியல் முகாம்களான ஐ.தே.க மற்றும் ஸ்ரீ.ல.சு.க. ஆகிய இருகட்சிகளுமே ஒருபோதும் ஒன்றுக்கொன்று ஒத்துழைக்க முடியாமலிருந்தார்கள். அவர்கள் பாராளுமன்றத்திலும் அரசாங்கத்திலும் ஒரே பதவிகளுக்காக போட்டியிட்டனர். இலங்கையின் இரு பிரதான கட்சிகளும் பொதுவான

அடித்தளத்திற்காக இணைந்து செயற்படுவதற்கான திறனைக் கொண்டிருக்கவில்லை என்பது சமாதான முன்னெடுப்புகளை மிகவும் கடினமாக்குவதாக இருந்தது. ஐ.தே.க சமாதான முயற்சி எடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உடன்படிக்கையொன்றினை செய்து கொண்டால், ஸ்ரீ.ல.சு.க. அதனுடன் இணைந்து பயணிக்கவும் மாட்டார்கள், அதனை சீர்குலைப்பார்கள், எதிராகவும் செயலாற்றுவார்களென அவர்கள் அஞ்சுவார்கள். சந்திரிகா (முன்னாள் ஜனாதிபதி) சமாதானத்திற்காக ஏதாவது செய்ய முயற்சித்தபோது, அந்த நேரத்தில் ரணில் அதை சீர்குலைப்பார் என்று அவர் பயந்தார். இது அமைதியை மிகவும் கடினமாக்கியதுடன், இரு கட்சிகளும் புலிகளுடன் சமரசம் செய்து கொள்ள பொதுவானதொரு அடித்தளத்தை கண்டுபிடிப்பதை விட ஒருவருக்கொருவர் சண்டையிடுவதில் அதிக கலோரி சக்திகளை செலவழித்ததாக சில நேரங்களில் உணர வேண்டியிருந்தது.

**கேள்வி: ஒரு சமாதான பேச்சுவார்த்தையாளர் என்ற உங்கள் பாத்திரப் பின்புலத்துடன், பேச்சுவார்த்தையின் பெறுபேற்றை மாற்றுவதற்கு உங்களால் செய்யக்கூடியதாக அங்கே ஏதாவது இருந்ததா?**

**எரிக்:** பொதுவான தளமொன்றினை கண்டுபிடிப்பதற்கு முக்கிய கட்சிகள் மீது நோர்வேயால் உண்மையில் செல்வாக்குச் செலுத்த முடியவில்லை. ஒருவேளை நாங்கள் இந்தியாவுடன் இன்னும் நெருக்கமாக வேலை செய்திருக்கலாம். அவ்வாறாக வேலை செய்வதற்கு கொழும்பு அரசியலில் சில பொதுவான முயற்சிகளை மேற்கொள்வதென்பது கடினமாக இருந்தது. அது கடினமாக இருந்திருந்தாலும், நாங்கள் அந்த பக்கத்தில் இன்னும் அதிகமாக செய்திருக்க வேண்டும். இலங்கையில் உள்ள மதத் தலைவர்களை அணுகுவதற்கு நாங்கள் இன்னும் அதிகமாக பிரயத்தனங்கள் எடுத்திருக்க வேண்டும். நான் கண்டிக்கு விஜயம் செய்து, பல தடவைகள் மகாநாயக்கரிடம் பேசினேன். குறிப்பாக பௌத்தமதத் தலைவர்களுடன் சிறந்ததொரு உறவை ஏற்படுத்திக் கொள்வதென்பது நல்லதே. ஏனெனில் இலங்கையில் மதம் மிகவும் முக்கியமான செல்வாக்கைச் செலுத்துகிறது.

பிரபாகரனை மேலும் பலதடவைகள் சந்திப்பதற்கு எங்களை அனுமதித்திருக்க வேண்டும். பலரை பிரபாகரனுடன் சந்திக்கச் செய்வதை நாங்கள் உறுதி செய்திருக்க வேண்டும். பிரபாகரனின் பார்வை மிகவும் குறுகியதாக இருந்தது. அவர் உண்மையில் இந்தியாவைப் புரிந்து கொள்ளவில்லை, இந்தியாவின் பிரதமரான ராஜீவ் காந்தியைக் கொன்றது போன்ற முட்டாள்தனமான கிரிமினல் வேலை ஒன்றை அவர் செய்திருந்தார். பிரபாகரன் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேசப் பார்வையைக் கொண்டிருந்தார். இன்னும் அதிகமான மக்கள் அவரைச் சந்தித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் ஆசியத் தலைவர்களை அவரைச் சந்திக்கச் செல்லுமாறு ஊக்குவிக்க நாங்கள் முயற்சித்தோம், ஆனால் இது இலங்கை அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டது. வெளிநாட்டுத் தலைவர்கள் பிரபாகரனிடம் விஜயம் செய்வதை அரசாங்கம் விரும்பவில்லை. அடிப்படையில் நானும் நோர்வேஜியர்களும் மாத்திரமே பிரபாகரனைச் சந்தித்த வெளிநாட்டவர்களாக அந்தக் கதை முடிந்தது. 15 ஆண்டுகளாக (நாங்கள் சமாதான முயற்சிகளில் ஈடுபட ஆரம்பித்த காலத்திற்கு முன்பு) எனக்குத் தெரிந்தவரை, பிரபாகரன் எந்த சிங்களவரையோ, இந்தியர்களையோ சந்தித்ததில்லை. அடிப்படையில் அவர் சந்தித்த ஒவ்வொருவரும் தமிழர். மேலும் உலகின் பரந்த தொலைநோக்குப் பார்வையை அவர் பெற்றிருந்தால், அது மிகவும் நன்றாக இருந்திருக்கும்.

**கேள்வி: அரசியல் அல்லது புவிசார் அரசியல் தொடர்பான எந்த அறிவையும் பிரபாகரன் கொண்டிருக்கவில்லை என்று நீங்கள் பலமுறை கூறியிருக்கிறீர்கள். நீங்கள் பிரபாகரனுடன் அதிக நேரம் செலவளிக்கவில்லை என்றால், இந்த அறிவை அவர் கொண்டிருக்கவில்லை என்று நீங்கள் எப்படி உறுதியாக நம்புகிறீர்கள்? நீங்கள் இதனைத் தெளிவுபடுத்த முடியுமா?**

**எரிக்:** நான் பிரபாகரனுடன் சிறிது நேரம் செலவிட்டேன். ஆனாலும் புலிகளின் பிரதம பேச்சாளரான அன்ரன் பாலசிங்கத்துடன் நிறைய நேரம் செலவிட்டேன்.

நேரடியாக ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள், இந்தியர்கள் அல்லது பிறரிடமிருந்து பரந்த பார்வைகள் தொடர்பாக மேலும் அவர் கற்றுக்கொள்ளக் கூடிய வகையில், மற்றவர்களைப் பிரபாகரனைச் சந்திக்க வைப்பதென்பது பயனுள்ளதாக இருந்திருக்கும்.
அந்த நேரத்தில் இந்த கருத்துக்களை நான் பிரபாகரனுக்கு சொல்லியிருந்தால், அவர் அதனை என்னிடமிருந்து கேட்க விரும்பியிருக்க மாட்டார். என் பார்வையில், அன்ரன் பாலசிங்கம் சமாதான முன்னெடுப்புகளின் கதாநாயகனாக இருந்தார். சில நேரங்களில் பிரபாகரன் பாலசிங்கம் சொல்வதைக் கேட்டார், சில நேரங்களில் கேட்கவில்லை. அவர் பாலசிங்கம் சொல்வதைக் கேட்காது, கொரில்லா படையைக் காட்டிலும் ஒரு மரபுசார்ந்த இராணுவமாக போராடுவது போன்ற பிரதான தவறுகளை அவர் செய்தார். இது 2009 இல் முடிவுக்கு வந்தது. பாலசிங்கம் வலுவாக ஆதரித்த தீர்வு, ஒரு முறையான கூட்டாட்சித் தீர்வு அல்ல,

**கேள்வி: இலங்கை அரசாங்கம் புலிகளை கவனித்துக் கொண்ட பின்னர், இப்போது அவர்கள் தங்கள் சொந்த காரணங்களுக்காக இஸ்லாமோஃபோபியாவைப் (Islamophobia) பயன்படுத்தி முஸ்லிம்களை தங்கள் புதிய எதிரியாகக் கண்டுள்ளனர் என்று நினைக்கிறீர்களா? இதுபற்றி கொஞ்சம் உங்கள் பார்வையைச் செலுத்த முடியுமா?**

**எரிக்:** இதில் இரண்டு அம்சங்கள் உள்ளன. முஸ்லீம் பயங்கரவாதம் என்பது ஓர் உண்மையான விஷயம்தான். ஈஸ்டர் தாக்குதல்களின் போது முஸ்லீம் பயங்கரவாதத்தின் கொடூரமான கொலைகளை நாங்கள் கண்டுள்ளோம். அரசாங்கம் இந்த அம்சத்தை தீவிர கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் தீவிரவாதக் குழுக்கள் மீதான பார்வையை மிகவும் உன்னிப்பாக அவதானித்தால், ஒருவேளை அவர்கள் வெளிநாட்டவர்களால் சில சந்தர்ப்பங்களில் ஊக்குவிக்கப்பட்டும் இருக்கிறார்களோ என்னவோ. ஆனால் அது ஒருபுறமிருக்க, முஸ்லிம்களை மரியாதையுடன் அணுகுவது மிகவும் முக்கியம் என்று நான் நினைக்கிறேன். அத்தோடு இலங்கையில் உள்ள நான்கு மதங்களையும் தான் மரியாதையுடன் அணுக வேண்டும். இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களிலும் தீவிரவாதிகள் உள்ளனர் என்பதை எங்களுக்கு நாங்களே நினைவுபடுத்திக்

கொள்ள வேண்டும். சமூகத்தில் உள்ள முஸ்லிம்களை அணுகுவது மற்றும் முஸ்லிம்களில் இருந்து எதிரிகளை உருவாக்காமல் பார்த்துக்கொளவது என்பது மிகவும் முக்கியம்.

**கேள்வி: யுத்தத்தின் போது கூட முஸ்லிம்கள் அரசுத் தரப்பில் இருந்ததோடு, அவர்கள் அரசுக்கு எதிராக ஒருபோதும் இருந்ததில்லை. ஆனால் ஈஸ்டர் தாக்குதலுக்கு முன்பே குறிப்பாக புத்த மதகுருமார்கள் மத்தியில் முஸ்லீம் விரோத உணர்வு நிறைய இருந்தது. ஆனால் அரசு முஸ்லீம்களை நடத்தும் விதத்தை நான் இஸ்லாமோ.:.போபிக் என்றே பார்க்கிறேன்.**

**எரிக்:** சமாதான முன்னெடுப்புகளின் போது முஸ்லிம்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு தனியான முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைக் கோரினர். புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான இரு தரப்புப் பேச்சுவார்த்தையாக இருக்க வேண்டும் என வலியுறுத்திய புலிகளால் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அதன் முடிவில் முஸ்லீம் தலைவர் ரவூப் ஹக்கீம் அரசாங்க பிரதிநிதிகள் குழுவில் சேர்க்கப்பட்டார். இலங்கையில் அநேகமான முஸ்லிம்கள் தமிழ் தனிநாட்டை ஆதரிக்கவில்லை.

**கேள்வி: மோதல் முடிந்ததில் இருந்து கதை பல்வேறு யு.என்.எச்.ஆர்.சி தீர்மானங்கள் போன்ற முயற்சிகள் உள்ளன. சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் தீர்மானங்களில் நான் மிகக் குறைந்த முன்னேற்றத்தையே காண்கிறேன். நல்லிணக்கத்தை வளர்த்தெடுக்க உங்களைப் போன்ற வெளியாட்கள் என்ன செய்ய முடியும்?**

**எரிக்:** முதலாவதாக, இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வொன்றினை இலங்கையர்களே காண வேண்டும் என்று நான் நம்புகிறேன். அதாவது வெளிநாட்டவர்களால் இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வொன்றினைக் காணமுடியாது. முடிவாக, இலங்கை என்பது சிங்களவர், முஸ்லிம்கள் மற்றும் தமிழர்களின் தீவாக உள்ளது. இது இந்தியர்கள், ஐரோப்பியர்கள் அல்லது அமெரிக்கர்களின் தீவு அல்ல. தீர்மானங்கள் உள்நாட்டில் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அதனை ஆதரிப்பதைத்தான் சர்வதேச சமூகத்தால் செய்ய முடியும். இதுவரை வேறெந்த ஒப்பீட்டுக்கும் இடமில்லாமல், இந்தியாதான் மிக முக்கியமான வெளிநாட்டுத் தரப்பு, 13வது திருத்தச்சட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும் என அவர்கள் தெளிவாக கோரியுள்ளனர். இந்தச் சட்டம் தமிழர்களுக்கான சுய அரசாக இருக்கும், ஆனால் இலங்கை என்ற தேசத்திற்குள் இருக்கும். இலங்கை அரசாங்கம் இதனை ஏற்றுக்கொண்டால், உலகின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் பாரிய ஆதரவு இருக்கும். அமெரிக்கா, ஐரோப்பா அல்லது சீனாவிலோ இதனை எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள்.

**கேள்வி: 13வது திருத்தச்சட்டம் என்பது இந்தியாவால் உத்தரவாதமளிக்கப்பட்டதொரு தீர்வு ஆகும். அத்துடன் அமுல்படுத்துவதைப் பொறுத்தவரையில் இது பாரிய சச்சரவு நிறைந்ததும் ஆகும். பொறுப்புக்கூறல் பொறிமுறைகளின் அடிப்படையில் யூ.என்.எச்.ஆர்.சி. தலையிட்டு எடுக்கும் நடவடிக்கைகளால், உண்மையில் நல்லிணக்கத்திற்கு இட்டுச்செல்லும் என்பதை என்னால் பார்க்க முடியாதுள்ளது, இது சமூகங்களை மேலும் கூறாக்குவதை நோக்கித் தள்ளுகின்றது.**

**எரிக்:** உதாரணமாக, இந்தியப் பிரதமர் மோடி இலங்கைக்கு விஜயம் செய்தபோது, அவர் பிரச்சினைக்கு தீர்வுகளைக் கேட்டார் என்று நான் நம்புகிறேன். நிச்சயமாக அவர் அவற்றை திணிக்கவில்லை. தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்குக் கிழக்கில் தமிழர்களுக்கு ஒருவகையான சுய அரசாங்கம் தேவை என்பதை அங்கீகரிப்பதற்கான முன்னோக்கிய வழியை அவர் சுட்டிக்காட்டினார். மேலும், தமிழர்கள் அவர்களது சொந்த நாட்டில் இரண்டாந்தரக் குடிமக்களாக அல்லாமல், முதல் தரமாக நோக்கப்பட வேண்டியது அவசியம்.
முக்கியமாக சிங்கள தேசியவாதிகளிடமிருந்தும் சில நேரங்களில் தீவிரவாதிகளிடமிருந்தும் நிறைய விமர்சனங்கள் அந்த நேரத்தில் எனக்குக் கிடைக்கப்பெற்றன. பிரபாகரனைக் கொன்ற நபர் நான் தான் என்று கூறி புலிகளின் எச்சசொச்சங்களால் பின்னாளில் அதே வழியில் அல்லது அதைவிட மோசமாக விமர்சிக்கப்பட்டேன். இந்த குற்றச்சாட்டுகள் அனைத்துமே முற்றிலும் அர்த்தமற்றவை என்பதுடன் அந்த குற்றச்சாட்டுகளின் தீவிரத்தைப் பற்றி நான் உண்மையில் அதிகம் கவலைப்படவில்லை. அது மக்களின் வாழ்வா அல்லது மரணமா என்பது பற்றியதாக இருந்தது என்பதை நாங்கள் அறிந்திருந்தோம், இலங்கையில் சமாதானத்தை கொண்டு வர எங்களால் முடிந்திருந்தால், ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும். எங்களால் வெற்றி பெற முடியவில்லை என்பதும் ஏராளமான இலங்கையர்கள் கொல்லப்பட்டனர் என்பதுமே பெரியதொரு வருத்தம்.

**கேள்வி: உங்களுக்கு ஏதேனும் வருத்தம் உள்ளதா அல்லது உங்கள் தரப்பில் ஏதேனும் தோல்விகளை அவதானிக்கிறீர்களா?**

**எரிக்:** எங்களால் எதனையும் அமுல்படுத்த முடியவில்லை. சமாதானத்தை அமுல்படுத்துமாறு (ஜனாதிபதி) சந்திரிகா மீதோ அல்லது பிரபாகரன் மீதோ எங்களால் எந்த அழுத்தத்தையும் பிரயோகிக்க முடியவில்லை. அந்த நேரத்தில் இரு கட்சிகளும் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்பினவோ, அதனை மாத்திரமே எங்களால் செய்ய முடிந்தது. சமாதானத்திற்காக போராடும் மக்களின் தன்னம்பிக்கையை இழக்கச் செய்வதை நான் விரும்பவில்லை. இன்று உலகில் ஏராளமான மோதல்கள் உள்ளன. சமாதானத்தை ஏற்படுத்துவதென்பது ஆபத்தானதொரு காரியம், பெரும்பாலும் இது தோல்வியிலேயே முடிவடையும். ஆனால் உலகில் சொற்பளவில் அல்ல, அதிகளவிலான சமாதானவாதிகள் தேவை.

**கேள்வி: இலங்கையில் இன்னுமொரு ஆயுதப் போராட்டம் எழலாமா?**

**எரிக்:** இலங்கை மக்கள் போரினால் மிகவும் சோர்வடைந்துள்ளனர் என்று நான் நினைப்பதால், இலங்கையில் எதிர்காலத்தில் ஆயுதப் போராட்டம் எதுவும் நடைபெறுவதற்கான சாத்தியத்தை நான் காணவில்லை. இந்த மோதலுக்கு காரணமாகவிருந்த பிரதான பிரச்சினையான தமிழ் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் உள்ளது. இலங்கை எப்படி இருக்கிறது என்பதை தமிழர்

ஒருவரது கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ள முயற்சிப்பது, இலங்கை சிங்கள மக்களுக்கு நல்லது. தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டில் இரண்டாம் தர குடிமக்களாக உணர்கிறார்கள், அவர்கள் புரிந்து கொண்ட மொழியில் காவல்துறையினரையோ அல்லது அதிகாரிகளையோ அணுக முடியாது. இலங்கை முன்னேறிச் செல்வதற்கு தமிழர் பிரச்சினைக்கு தீர்வொன்றினைக் காண வேண்டிய தேவையொன்றுள்ளது.

**கேள்வி: இலங்கை புலம்பெயர்ந்தோரின் மீள் ஈடுபாடு மூலோபாயத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்? அவர்கள் இங்கே முதலீடு செய்வது எவ்வளவு முக்கியம்?**

**எரிக்:** புலம்பெயர்ந்த சமூகத்திற்கு பாரிய பங்கு உள்ளது. இலங்கை புலம்பெயர்ந்தோர் பிரதானமாக தமிழர்கள் மாத்திரமல்ல, சிங்களவர்களும் தான். அத்துடன் அவர்கள் வெற்றி பெற்ற சமூகமாகவும் இருக்கின்றார்கள். அவர்கள் உயர்ந்த கல்வியறிவு கொண்ட குழுவாக இருக்கிறார்கள். எனது நாடான நோர்வேயில், இளம் தமிழர்கள் பல்கலைக்கழகங்களில் சராசரி இளம் நோர்வேஜியர்களை விட மிகச் சிறப்பாகக் கல்வி கற்று வருகின்றனர். கனடா, ஜேர்மனி மற்றும் பிரித்தானியாவிலும் இதுதான் நிலை. இலங்கையில் உள்ள நல்ல பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், வேலைகள், தொழிற்சாலைகள் அல்லது சுற்றுலாத் தலங்களில் நாங்கள் (சாத்தியமான) முதலீடு செய்ய முடிந்தால், அது இலங்கையை முன்னேற்றத்திற்கு கொண்டு செல்லும். அனைத்து சமாதான முயற்சிகளுக்கும் புலம்பெயர்ந்தோர் ஆதரவு வழங்க வேண்டும், ஆனால் இலங்கையின் சமாதான முயற்சி இலங்கையாலேயே தலைமை தாங்கப்பட வேண்டும் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். விமர்சன, புலமைசார்ந்த மற்றும் தார்மீக ஆதரவை வழங்குவதற்கு புலம்பெயர்ந்த சமூகம் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**பேட்டி கண்டவர்: கலானி குமாரசிங்க**
(டெய்லி மிரர், 5 ஜூலை 2021)
**தமிழில்: 'வானவில்'**

(*முஸ்லிம் என்பவர் பகுத்தறிவு குறைந்தவர், நவீன காலத்திற்கு முந்திய பேர்வழி, தேங்கிப் போனவர், வளர்ச்சியுடன் மேற்செல்லத் தெரியாதவர், நவீனத்துவத்திற்குத் தகுதியற்றவர் என்றெல்லாம் சொல்வதுதான் இஸ்லாமோ.:போபியா – 'வானவில்'*)

# இலங்கை தேயிலை ஏற்றுமதி அதிகரிப்பு!

உலகில் அதிகமானதும் தரமானதுமான தேயிலையை உற்பத்தி செய்யும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இருந்தும் தேயிலை உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்கள் தமது நாள் சம்பளத்தை 1000 ரூபாவாக அதிகரித்துத் தருமாறு கோரியபோது தோட்டக் கம்பனிகள் பலவிதமான சாக்குப்போக்குகளைச் சொல்லி மறுத்து வந்தன. அந்தச் சாக்குப் போக்குகளில் முக்கியமானது தமக்கு போதிய வருமானம் இல்லாதபடியால் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளம் வழங்க முடியாது என்பதாகும். கடைசியில் அரசாங்கம் தலையிட்டே 1000 ரூபா சம்பளத்துக்கு தோட்ட கம்பனிகளைச் சம்மதிக்க வைக்கவேண்டி வந்தது.

தொழிலாளர்களை நல்லமாதிரி பராமரித்தால் அவர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவார்கள் என்பதற்கு தற்போது இலங்கையின் தேயிலை ஏற்றுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு எடுத்துக்காட்டி நிற்கிறது. கடந்த மாதம் (2021 யூன்) இலங்கை 24.76 பில்லியன் ரூபா பெறுமதியான 26.99 மெட்ரிக் தொன் தேயிலையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. 2020 யூன் மாதம் ஏற்றுமதி செய்த தொகையுடன் ஒப்பிடுகையில் இது 3.39 பில்லியன் ரூபா அதிகமானதாகும்.

இலங்கை தேயிலையை அதிகமாக வாங்கும் முதலாவது ஸ்தானத்தில் துருக்கி இருக்கின்றது. அதற்கு அடுத்த ஸ்தானத்தில் ஈராக், ரஸ்யா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என்பனவும், அதற்கு அடுத்ததாக ஈரானும் இருக்கின்றன. இவை தவிர, சீனா, அஸெர்பைஜான், லிபியா, சிரியா, சவூதி அரேபியா, சிலி உட்பட மேலும் பல நாடுகள் இலங்கைத் தேயிலையை விரும்பி வாங்கி வருகின்றன.

# கொத்தலாவல பல்கலைக்கழகம் சம்பந்தமாக ஜனாதிபதி தெரிவித்த கருத்து!

**சே**ர் ஜோன கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் கொண்டுவரப்படும் என ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ தெரிவித்திருக்கிறார்.

பௌத்த ஆலோசனைச் சபையின் 11ஆவது கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றபோது கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருக்கிறார். மேலும் அங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி:

நாட்டின் எதிர்காலச் சந்ததியினரின் நன்மை கருதி அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுக்கும்போது, சில தரப்பினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலத்துக்கும் அவ்வாறான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் உள்ள சில குறைபாடுகள் களையப்பட்ட பின்னர் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகமும் அதன் கீழ் கொண்டுவரப்படும். கடந்த 40 வருடங்களில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் பெருந்தொகையான கல்விப் புலமையாளர்களை உருவாக்கியுள்ளது. இது போன்ற சிறந்த பல்கலைக்கழகங்களை உருவாக்குவதன் மூலம் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பெருந்தொகையான பணத்தைச் செலவழித்து வெளிநாடுகளுக்கு கற்பிக்க அனுப்பும் நிலையை மாற்ற முடியும்.

இவ்வாறு ஜனாதிபதி மகா சங்கத்தினரிடம் தெரிவித்தார்.

இதேவேளையில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் 19.06.2021 இல் இடம்பெற்ற சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் பாதுகாப்பு அமைச்சுசார் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. பின்னர் எதிர்வரும் ஓகஸ்ட் 3ந் திகதியிலிருந்து 6ந் திகதி வரையான நான்கு நாட்கள் பாராளுமன்றத்தில் இச்சட்டமூலம் தொடர்பாக அமர்வுகளை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# சூழலியலின் தத்துவம்

**Felix Guattari இன் THE THREE ECOLOGIES என்ற நூலை முன்வைத்து**



**சு.அருண் பிரசாத்**

*1*

சூழலியல் என்பது வெறும் 'இயற்கைப் பொருட்களின் தொகுப்பு' மட்டும்மல்ல. அது சமூகம், உடல், உள்ளம் ஆகிய மூன்றின் இணைவு. இவை ஒன்றோடொன்றுப் பிரிக்கமுடியாத வகையில் இணைந்து 'சுற்றுச்சூழல்' ஆகிறது.

உணர்திறன்மிக்க உயிர்க்கோளத்தைக் கொண்டிருக்கும் பிரம்மாண்டச் சூழலியல் அமைப்பு, தற்போதைய நிலைக்குப் பரிணமிக்க சுமார் 450 கோடி ஆண்டுகள் எடுத்துக்கொண்டது. ஓருயிரி தொடங்கி பேருயிரினங்கள்வரை இங்கு உயிர்வாழ்வை மேற்கொண்டிருக்கின்றன. புவியின் சுற்றுச்சூழல் என்பது இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த உயிர்ப்பன்மையின் பெருக்கமே (multiplicity) ஆகும். உயிர்கள் ஒவ்வொன்றுக்கும் இந்தச் சூழலியல் அமைப்புகள் ஆற்றல்மிக்க வாழிடமாக விளங்குகின்றன. சூழலியல் என்பதற்கான ஆங்கிலச் சொல்லின் (Ecology) மூலம் கிரேக்க மொழியில் இருந்து பெறப்பட்டது. 'வீடு' (eco – oἶκος) என்பது அதன் பொருள். அந்த வகையில், அறியப்பட்ட பிரபஞ்சத்தில் உயிர்களுக்கான ஒரே வீடாக இப்புவி விளங்குகிறது.

ஆனால், இயற்கை மீதான மனிதகுலத்தின் அவமதிப்பு, சூழலியலின் வயதோடு ஒப்பிடச் சாத்தியமே இல்லாத மீச்சிறு காலகட்டத்தில் அதன் தன்மையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இயற்கை மனிதகுல இணைவு திரிந்திருக்கிறது.

மனிதச் செயல்பாடுகளால் அதிகரித்திருக்கும் மாசு, காடழிப்பு, உயிர்ப்பன்மை இழப்பு, அற்றுப்போகும் உயிரினங்கள், மூலவளங்கள் குறைந்துவருதல், பாலையாகும் ஏரிகள், அதிதீவிர தட்பவெப்பநிலை, புவி வெப்பமாதல், கடல்மட்ட உயர்வு, அணுசக்தி மேம்பாடு உள்ளிட்டவைத் திரும்பிச் செல்லமுடியாத, எதிர்காண முடியா விளைவுகளுக்கு வழிவகுத்திருக்கிறது.

ஆயிரக்கணக்கான உயிரினங்கள் ஏற்கெனவே அற்றுப்போய்விட்டன (extinct). பூச்சிகளில், பறவைகளில் இருந்து விலங்குகள்வரை ஏராளமான உயிரினங்கள் தொடர்ந்து அற்றுப்போய்க் கொண்டிருக்கின்றன் யானை போன்ற பாலூட்டிகளும், புலிகளும்கூட அபாயக் கட்டத்தில் இருக்கின்றன. மிகப் பெரிய பரப்பைக் கொண்டுள்ளதால் புவியின் பெருங்கடல்கள் மனிதர்களின் தாக்கத்துக்கு அப்பாற்பட்டது என்ற நம்பிக்கை பரவலாக உள்ளது. ஆனால் மாசு, சராசரி வெப்பநிலை உயர்வு, கட்டுமீறிய மீன்பிடிப்பு போன்றவை அடையாளம் காணமுடியாத 'காரணி'களை உருவாக்கி மீன்களின், கடல் உயிரிகளின் பேரழிவுக்கு வழிவகுத்துள்ளது. சூழலியக் கொலையின் (ecocide) விளிம்பில் மனிதகுலம் இப்போது நின்றுகொண்டிருக்கிறது.

இப்புவியில் கடந்த 12,000 ஆண்டுகள் நிலவிவந்த காலம், புவியியல் அடிப்படையில் 'ஹாலோஸீன்' (Holocene) யுகம் என்று வழங்கப்பட்டது. ஆனால் புவியின் சூழலியல் தன்மையை ஒட்டுமொத்தமாகக் குலைக்கும் வகையிலானச் செயல்பாடுகள் மூலம் முதன்மை ஆதிக்கச் சக்தியாக மனிதகுலம் உருவெடுத்திருக்கும் இந்தக் காலகட்டம், 'ஆந்திரொபொஸீன்' (Anthropocene) என்னும் மனித ஆதிக்க யுகத்தைத் தொடங்கி வைத்திருக்கிறது.

இந்த 'மனித ஆதிக்க யுகம்' என்பது மனிதவழி அழிவின் காலம் மட்டுமல்ல. சுய–விழிப்புணர்வின் அறிதல் கணமும்தான். இப்புவியின், சூழலியலின் முதன்மை அழிவு சக்தியாக தாம் உருவெடுத்திருக்கிறோம் என்ற தன்னுணர்வை மனிதகுலம் பெற்றிருக்கிறது. இக்காலகட்டத்தின் எல்லாக் கணங்களிலும் இந்தத் தன்னுணர்வு நீடித்திருக்கும் நிலை மனிதகுலத்துக்கு விதிக்கப்பட்டிருக்கிறது.

சர்வதேச சுற்றுச்சூழல் உடன்படிக்கைகளுக்காக அரசியல்வாதிகள் கூடும்போது மட்டுமல்லாமல், நம்முடையச் சாதாரணச் செயல்பாடுகளில்கூட சூழலியல் கேள்வி உருவாகும் வகையில் அந்தத் தன்னுணர்வு நிலைபெறத் தொடங்கிமிருக்கிறது. முன்பு எப்போதும் இல்லாத வகையில் சூழலியல் சார்ந்த அறக்கணக்குகள் உருவாகியுள்ள காலகட்டமாக இது பரிணமித்துள்ளது. இந்தத் தன்னுணர்வின் கண்டறிதல் என்பது கோபர்நிகஸ், டார்வின், ஃப்ராய்ட் ஆகியோரின் கண்டறிதல்களோடு ஒப்புநோக்கத்தக்கது.

மனிதச் செயல்பாட்டினால் புவியின் சுற்றுச்சூழலில் ஏற்படும் பேரளவிலான மாற்றங்களைப் புரிந்துகொள்வதற்கு நாம் புவியியல், நீரியல், வேதியியல் போன்றவற்றைத் தாண்டி மேலே செல்ல வேண்டும் இதற்கு அறிவுசார் வழிகாட்டி ஒன்று தேவை!

*2*

*16* ஜூலை *1945* அன்று அதிகாலை *5.29* மணிக்கு அமெரிக்காவின் நியூ மெக்ஸிகோ பாலைவனத்தில் நிகழ்த்தப்பட்ட முதல் அணு ஆயுதச் சோதனை அறிவியல்–தொழில்நுட்பத்தின் நம்பமுடியாத சாத்தியங்களை மனிதகுலத்துக்குத் திறந்துவிட்டது. இது இயற்கைமீதான தன்னுடைய ஆதிக்கத்தை மனிதகுலம் உறுதிசெய்துவிட்ட ஒரு கணமும்கூட.

மரபணுவியல், தானியக்கம்,

எந்திரப்புரட்சி, பெருந்தரவுகள், செயற்கை நுண்ணறிவு, ஆழ்கற்றல், இயந்திரக் கற்றல் என அறிவியல்–தொழில்நுட்ப மாற்றங்கள் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் மனிதகுலத்தின் அறிவெல்லையை நீட்டித்துள்ளன. அதேவேளை உலகமயமாக்கல் என்ற இன்னொரு நிகழ்வையும் அது தொடங்கிவிட்டிருந்தது.

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் உலகமயமாக்கல் தீவிரமடைந்தது. பனிப்போரின் முடிவும், சோவியத் ஒன்றியத்தின் உடைவும் முதலாளித்துவ அமைப்பை உலகின் பொருளாதார ஆதிக்கச் செயல்வகையாக்கின. இந்தப் பின்னணியில் உலகளாவிய முதலாளித்துவ அமைப்பு சமூக, சூழலியல் சிக்கல்களுக்கான வேராக ஆழம்பெற்றது. ‘வலியது வாழும்’, ‘வளர்ச்சி’ என்பன போன்ற கருத்தாக்கங்களை அடிப்படையாகக் கொண்ட இந்த முதலாளித்துவ அமைப்பு மனித வாதையைத் தொடர்ந்து ஏற்படுத்தி, புவியின் சூழலியலை அழிக்கத் தொடங்கியது.

திறந்த சந்தை (free-market) என்ற சித்தாந்தம், உலகம் முழுக்க இயற்கை வளங்களின் பரவலான கொள்ளைக்கு வித்திட்டது. உலகச் சந்தையில் அல்லது சந்தை உலகில் நுழைவதற்காக ஏழை நாடுகள் தங்கள் உழைப்பை மிகமிகக் குறைந்த கூலிக்கு விற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டன. நீடித்தவளர்ச்சி பற்றிய சிந்தனை இன்றி தங்கள் இயற்கை வளங்களைச் சுரண்டினர். இதனால் அச்சுறுத்தலுக்கு உள்ளானது சுற்றுச்சூழல் மட்டுமல்ல, மனிதகுலத்தின் வாழ்க்கைமுறையும்தான். மற்றமை உணர்வு அதன் அனைத்துக் கூறுகளையும் இழக்கத் தொடங்கியிருக்கிறது.

மாபெரும் வறுமையிலும் ஊட்டச்சத்துக் குறைப்பாட்டினாலும் உலக மக்கள்தொகையின் மூன்றில் ஒரு பகுதி இன்றும் வீழ்ந்துகிடக்கும் அதே வேளையில்தான், மனிதகுல வரலாற்றில் எப்போதுமில்லாத அளவுக்குத் திகைக்கச் செய்யும் அளவிலான செல்வம் மக்கள்தொகையில் ஒரு சதவீதத்துக்கு குறைவானோரிடம் குவிந்துகொண்டிருக்கிறது. அறிவியல்–தொழில்நுட்பத்தின் புதிய முன்னேற்றங்கள் மனிதனை விடுதலை செய்வதற்கு மாறாக இலாபத்தை நோக்கிய முதலாளித்துவத்தின் ஓட்டத்துக்குச் சேவை செய்துகொண்டிருக்கின்றன. இலாபநோக்கிலான பொருளாதாரமும் அதிகார உறவுகளும் ஒற்றைப்படையாகச் சமூக உழைப்பை நிர்வகிப்பது முட்டுச் சந்துக்கே இட்டுச்செல்லும்.

முதலாளித்துவத்தின் உலகளாவிய ஆதிக்கம் தகவல்தொடர்பின் வளர்ச்சிக்கு இணையாக நிகழ்ந்தது. உடனடித் தகவல்தொடர்பு உலகை ஒரு கிராமமாக்கியது. தகவல்தொடர்புகள் மூலம் உலகம் ஒரே சமூகமாக இணைக்கப்பட்டது.

தொழிற்சாலைக்குப் பிந்தைய முதலாளித்துவம் (Post-industrial Capitalism) [ஒருங்கிணைந்த உலக முதலாளித்துவம் (Integrated World Capitalism) என்று இதற்கு ஃபெலிக்ஸ் கடாரி பெயரிடுகிறார்] அதன் இருப்பிடத்தை அறியமுடியாத அளவுக்கு உலகம் முழுமைக்கும் தன் அதிகாரத்தைப் பரவச் செய்துவிட்டது. அது இருப்பிடமற்றும் எல்லையற்றும் இருக்கிறது. வன்முறை இன்றிச் சமூக ஒழுங்கைக் கொண்டுவர ஒருங்கிணைந்த உலக முதலாளித்துவத்தின் உச்சபட்ச ஆயுதமாக வெகுசன ஊடகம் (mass media) செயல்படுகிறது. ஸ்மார்ட்போனைக் கருவியாகக் கொண்டு இன்றைக்குச் சமூக ஊடகங்கள் அந்த இடத்தைப் பிடித்திருக்கின்றன. இதன் மூலம் சந்தையின் புலப்படாத அழுத்தத்தினால் தனிநபர் என்ற கருத்தாக்கம் புதுவகையாகக் கட்டமைப்படுகிறது.

இந்தப் பின்னணியில் அறிவியல்–தொழில்நுட்பப் புலத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கும் மேம்பாடுகள், கைமீறிச் சென்றுகொண்டிருக்கும் சூழலியல் பிரச்சினைகளுக்கான சாத்தியமுள்ள தீர்வுகளை வழங்கி, புவியில் உயிர்கள் நீடித்திருப்பதற்கான பயன்மிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிசெய்தாலும் செர்நோபில், ஃபுகுஷிமா, எய்ட்ஸ், கோவிட்–*19* போன்றவை அறிவியல்–தொழில்நுட்பத்தின் எல்லைகளைப் பட்டவர்த்தனமாக அம்பலப்படுத்தியுள்ளன.

அறிவியல்–தொழில்நுட்பம் மனிதகுலத்தின் முடிவுக்கு இட்டுச்செல்கிறது என்றால், அரசு சார்ந்த தொழில்நுட்பவாதிகளிடம் கண்மூடித்தனமான நம்பிக்கை வைக்காமல், வெளிப்படையான நிர்வாகம் மற்றும் கட்டுப்பாட்டைக் கொண்ட கூட்டுமுறைகள் நமக்குத் தேவை.

இந்தப் பின்னணியில் முதலாளித்துவத்தினால் விளைந்த உலகளாவிய சூழலியல் நெருக்கடிகளைத் தத்துவரீதியாக ‘சுற்றுச்சூழல் தத்துவவியல்’ அணுகுகிறது. சமகாலத்தில் திமோதி மோர்டன் (Timothy Morton) போன்றோர் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கும் இந்தப் புலத்தின் முன்னோடி நூல் ஒன்றைப் பிரெஞ்சுத் தத்துவவியலாளர் ஃபெலிக்ஸ் கடாரி (Felix Guattari) *1989*இல் எழுதியிருக்கிறார். ‘தி த்ரீ எகாலஜீஸ்’ (The Three Ecologies) என்ற அந்த நூல் சூழலியல் தத்துவம் சார்ந்த முதன்மை நூல்களில் ஒன்று, அது வெளியான காலகட்டத்தை விடவும் இன்றைக்கு மிகுந்த பொருத்தப்பாடுடையதாகத் திகழ்கிறது.

***3***

‘சூழலியத்துவம்’ (Ecosophy – Ecology + Philosophy) என்ற கருத்தாக்கத்தின் மூலம் சூழலியலையும் தத்துவத்தையும் கடாரி ஒன்றிணைக்கிறார். ‘மூன்று சூழலியல்’ என்று இதன் அடிப்படைக் கூறுகளாக அவர் பட்டியலிடுபவை:

சமூகச் சூழலியல் (Social ecology)
உளச் சூழலியல் (Mental ecology)
சுற்றுச்சூழல் சூழலியல் (Environmental ecology)

1) சமூகச் சூழலியல்: சமூகத்தின் ஒவ்வோர் அங்கத்திலும் மனித உறவுகளை மறுகட்டமைப்பு செய்தல் நகர்ப்புற, பணியிடப் பின்னணியில் இணையர்களாகவும், குடும்பமாகவும் வாழும் முறைகளைத் திருத்தியமைக்கவும் மறுகண்டுபிடிப்பு செய்யவும் குறிப்பிட்ட வழக்கங்களை மேம்படுத்துதல்.

2) உளச் சூழலியல்: உடலுக்கும் தன்னிலைக்குமான உறவை மறுகண்டுபிடிப்பு செய்தல் உயிர்ப்பு மற்றும் இறப்பின் ‘மர்மங்களை’ அறிதல்.

ஒருங்கிணைந்த உலக முதலாளித்துவம் வெகுசன ஊடகத்தைக் கருவியாகக் கொண்டு சமூக, பொருளாதார, பண்பாட்டு அமைப்பில் செலுத்தும் தாக்கம், மனிதர்களின் தன்னிலையை ஆக்கிரமித்துள்ளது. திறந்த சந்தையின் உற்பத்தியோடு நேரடித் தொடர்புகொண்டிருக்கும் இந்த நிகழ்வு, சூழலியல் பிரச்சினைகளுக்கு

எப்படி வழிவகுக்கிறது என்பதை கடாரி இந்த நூலில் ஆராய்ந்திருக்கிறார்.

புவியை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் சூழலியல் நெருக்கடி, ஒருங்கிணைந்த உலக முதலாளித்துவம் என்னும் புதிய வடிவிலான முதலாளித்துவ விரிவாக்கத்தின் நேரடி விளைவு என்ற கடுமையான விமர்சனத்தை இந்த நூலில் முன்வைக்கும் கடாரி, சமூக உறவுகள், மனிதர்களின் தன்னிலை ஆகியவற்றில் அதன் தாக்கத்தைச் சுற்றுச்சூழல் அக்கறை கொண்டு விவாதித்திருப்பதன் மூலம் சூழலியலுக்கான வரையறையை விரிவுபடுத்தியுள்ளார்.

இயற்கை என்பது முன்னெப்போதையும் விட பண்பாட்டில் இருந்து பிரித்துப் பார்க்க முடியாத நிலையை எட்டியிருக்கிறது. அந்த வகையில் வெறும் மாசு என்ற அளவில் மட்டும் இப்பிரச்சினை அணுகும் அரசியல், நிர்வாக அமைப்புகள் அதன் விளைவுகளைப் புரிந்துகொள்ளும் திறனற்றவை.

இது உலகளாவியத் தீர்வை வேண்டுவது என்பதால், வெறும் தொழில்நுட்ப நோக்கிலான தீர்வுகளை மட்டும் நம்பமுடியாது. எனவே பேருரு மாற்றங்களை மேற்கொள்ளும் அதேவேளையில் உணர்திறன், நுண்ணறிவு போன்றவற்றையும் தீர்வுக்கான அணுகுமுறையில் உள்ளடக்க வேண்டும். எனவே, பொருள்வய, பொருள்வயமற்ற பொருட்களின் உற்பத்தி நோக்கங்களை நியாயமான அரசியல், சமூக, பண்பாட்டு புரட்சியால் மறுகட்டமைப்பு செய்யவேண்டும்.

உயிரினங்கள் மட்டுமே அற்றுப் போய்க்கொண்டிருக்கவில்லை, சொற்களும் சொல்லாடல்களும்தான். எனவே சமூக விடுதலைக்கான முன்னணியில் இருப்பவர்கள் இந்த மறுகட்டமைப்புக்கானக் கோட்பாட்டு வரையறைகளை மறு உருவாக்கம் செய்வது அவசியம்.

உலகின் மிகப் பெரிய முதலாளித்துவ நாடுகளே, புவியின் முதன்மை மாசுபாட்டாளர்கள். ஆனால் வெகுசன ஊடகம் ‘சுற்றுச்சூழல் பிரச்சினைகள்’ எங்கோ காணமுடியாத இடத்தில் நிகழ்வதாக அறிவித்து ஒருங்கிணைந்த உலக முதலாளித்துவத்தின் நலனுக்கே வழிவகுக்கிறது. அந்த வகையில், வரம்புகளற்ற, நவீன ஒருங்கிணைந்த உலக முதலாளித்துவத்தைத் தாண்டிச் செல்வதற்கான வழிமுறைகளாக இந்த மூன்று சூழலியல்களின் இணைவை கடாரி வலியுறுத்துகிறார். ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கும் சமூக, உள, சுற்றுச்சூழல் சூழலியல்கள் இன்றைய சூழலியல் பிரச்சினைகளின் தீர்வுக்கான பிரகடனமாக முன்நிற்கின்றன.

உதவிய கட்டுரை:
'A reckoning for our species': the philosopher prophet of the Anthropocene, The Guardian

# ஆப்கானிஸ்தானில் இந்திய புகைப்பட கலைஞர் டேனிஷ் சித்திக் கொல்லப்பட்டார்

மும்பையை சேர்ந்த டேனிஷ் சித்திக் Reuters செய்தி நிறுவனத்தில் மூத்த புகைப்படக் கலைஞராக பணியாற்றி வந்தார். ரோஹிங்கியா அகதிகளின் அவலம் குறித்து இவர் 2018 இல் எடுத்த புகைப்படங்கள் இவருக்கு புலிட்சர் விருதை பெற்றுக் கொடுத்தது. ஆப்கானிஸ்தானில் அரசு படைகளுக்கும் தலிபான் இயக்கத்தினருக்கும் இடையில் நடந்து வரும் சண்டையை புகைப்படங்களாக எடுக்க சென்ற குழுவில் இவர் இடம் பிடித்திருந்தார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கும், அந்நாட்டின் இராணுவப் படைகளுக்குமான போரில் அமெரிக்கா தனது இராணுவப் படைகளை அனுப்பி தலிபான் இயக்கத்தினரை அழிக்க ஆப்கன் படைகளுக்கு உதவியது. ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் வீழ்ச்சிக்குப் பிறகு ஜனநாயக அரசு அமைக்கப்பட்டது. பயங்கரவாதம் முடிவுக்கு வந்ததை அடுத்து, அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமாவின் ஆட்சிக்காலம் முதலே தனது படைகளை அமெரிக்கா அங்கிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பப் பெற்றுவந்தது. அந்த வகையில் தற்போதுதான் அமெரிக்கப் படைகளில் 90 சதவிகிதம் அளவுக்கு ஆப்கானிஸ்தானிலிருந்து




அமெரிக்காவுக்கு திரும்பியிருக்கின்றன.

அமெரிக்கப் படைகள் முழு வீச்சில் வெளியேறிவருவதைத் தொடர்ந்து, இனி நாட்டைப் பாதுகாக்கும் முழுப் பொறுப்பும் ஆப்கன் படைகளிடம்தான் என்றாகிவிட்ட நிலையில், ஆப்கானிஸ்தானில் சில ஆண்டுக்காலம் பதுங்கியிருந்த தலிபான் இயக்கத்தினர் மீண்டும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியிருக்கின்றனர். அதனால், தலிபான்களின் கை அண்மையில் அங்கு ஓங்கியிருக்கின்றது. அதன் காரணமாக, கடந்த சில வாரங்களாக மீண்டும் தலிபான்களுக்கும் ஆப்கன் படைகளுக்கும் இடையே பயங்கர மோதல்கள் நடந்து வருகின்றன.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானின் காந்தஹார் நகரத்தில் ஜூலை 16ந் திகதி இருதரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 38 வயதான டேனிஷ் சித்திக் (Danish Siddiqui) கொல்லப்பட்டார்.

அவரது உடலை டெல்லி ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலை வளாகத்தில் உள்ள அடக்க ஸ்தலத்தில் நல்லடக்கம் செய்ய அதன் துணை வேந்தர் அனுமதி அளித்துள்ளார். டேனிஷ் சித்திக் ஜாமியா பல்கலையின் முன்னாள் மாணவர். இவரின் தந்தை அக்தர் சித்திக் இந்த பல்கலையின் Dean ஆகப் பணியாற்றியவர்.

பெரும்பாலும் மக்களின் பிரச்னைகள் சார்ந்தே இவரது ஒளிப்படங்கள் அமைந்திருந்தன. டெல்லியில் கொத்துக் கொத்தாக கொரோனாவால் உயிரிழந்தோரின் சடலங்கள் எரியூட்டப்படும் புகைப்படத்தில் இருந்து, ரோஹிங்கியா அகதிகள், டெல்லி விவசாயிகளின் போராட்டம் என இவரது புகைப்படங்கள் பல மாற்றங்களை சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளன. ஓர் எளியோருக்கான கலைஞன் கொல்லப்பட்ட நிகழ்வு, வரலாற்றின் தவிர்க்கமுடியாத துன்பியல் நிகழ்வு. “அவர் எங்கள் கண்” என சித்திக் பற்றி ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான ஃபர்ஹத் பசீர் கான் கூறியுள்ளார்.

# தோழர் சங்கரய்யா: நூற்றாண்டு காணும் பொதுவுடமை சுடரின் அரசியல் வரலாறு



**ஜூ**லை 15ந் திகதி 99 வயதை நிறைவு செய்து, நூறாவது ஆண்டில் கால் பதிக்கும் பொதுவுடமைக் கட்சியின் மூத்த தலைவர் தோழர் என். சங்கரய்யா, தன் வாழ்வின் குறிப்பிடத்தக்க காலகட்டத்தை நாட்டிற்கான போராட்டங்களில் சிறையில் கழித்தவர். சங்கரய்யாவின் வரலாறு என்பது தமிழக கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறும்கூட.

இந்திய சுதந்திர போராட்டம், தீண்டாமை கொடுமைக்கு எதிரான போராட்டம், விவசாயிகளுக்கான போராட்டம் என போராட்டமும் சிறையுமே வாழ்க்கையாகக் கழித்தவர் சங்கரய்யா.

தற்போது தூத்துக்குடியில் உள்ள ஆத்தூரைச் சேர்ந்தது சங்கரய்யாவின் குடும்பம். சங்கரய்யாவின் தாத்தா எல். சங்கரய்யா வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது மகன் நரசிம்முலு மும்பாயில் பொறியியல் படிப்பை முடித்த பிறகு, கோவில்பட்டியில் செயல்பட்டுவந்த ஜப்பானிய நிறுவனத்தில் பணிக்குச் சேர்ந்தார். அங்கு அவருக்கும் அவருடைய மனைவி ராமானுஜத்திற்கும் 1922 ஜூலை 15ஆம் தேதி சங்கரய்யா பிறந்தார். அவருக்கு எட்டு சகோதர – சகோதரிகள். சங்கரய்யாவுக்கு பெற்றோர் இட்டபெயர் பிரதாபசந்திரன்.

ஆனால், தனது பெயரையே தன் பேரனுக்கு வைக்க வேண்டுமென தாத்தா வலியுறுத்தியதால், அவரது பெயர் சங்கரய்யா என மாற்றப்பட்டது. 1930ல் நரசிம்முலு மதுரை ஹார்வி மில்லில் பணியாற்ற மதுரைக்கு குடும்பத்தோடு சென்றார். புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளியிலும் ஐக்கிய கிறிஸ்தவ உயர்நிலைப் பள்ளியிலும் பள்ளிக் கல்வியை முடித்தார் சங்கரய்யா. 1937ஆம் ஆண்டில் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இன்டர்மீடியேட் வகுப்பில் சேர்ந்தார்.

அந்த காலத்தில் சுதந்திர போராட்டம் உச்சகட்டத்தில் இருந்தது. அமெரிக்கன் கல்லூரி மாணவர்களிடமும் மேலோங்கிவந்த அந்த உணர்வை கல்லூரி முதல்வர் பிளிண்ட் விரும்பவில்லை. இருந்தபோதும் சங்கரய்யா உள்ளிட்ட மாணவர்கள் தேசிய உணர்வுடன் தொடர்ந்து செயல்பட்டனர். அப்போது சென்னை மாகாண பிரதமராக இருந்த ராஜாஜி, இந்தியை கட்டாயப் பாடமாக்கியபோது அதனை எதிர்த்து நடந்த போராட்டத்தில் கலந்துகொண்டார் சங்கரய்யா.

இதற்குப் பிறகு சுதந்திர போராட்டத்திற்கென சென்னையில் செயல்பட்ட சென்னை மாணவர் சங்கத்தைப் போலவே மதுரையிலும் மதுரை மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டது. சங்கரய்யா அதன் செயலாளரானார். மதுரையில் உள்ள மக்கள் பிரச்சனைக்காக இந்த சங்கம் தொடர்ந்து ஊர்வலங்களையும் பொதுக்கூட்டங்களையும் நடத்தியது. இதன் பிறகு பல்வேறு இடங்களில் மாணவர் சங்கங்கள் துவக்கப்பட்டன.

இதில் கலவரமடைந்த கல்லூரி முதல்வர் பிளின்ட், சங்கரய்யாவை அழைத்து வேறு கல்லூரிக்குச் சென்றுவிடும்படி கூறினார். ஆனால், சங்கரய்யா மறுத்து விட்டு, அமெரிக்கன் கல்லூரியிலேயே படிப்பைத் தொடர்ந்தார்.

தொடக்கத்தில் சுயமரியாதை இயக்கத்தின் மீது ஈடுபாடு கொண்டிருந்த சங்கரய்யா, பிறகு கொஞ்சம் கொஞ்சமாக தேசிய விடுதலை இயக்கத்தின் பக்கம் திரும்பினார். அந்த காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே 'பூரண சுதந்திரம்' கோரி தீர்மானம் நிறைவேற்றியிருந்ததால், அந்த கட்சியில் இணைவதென முடிவெடுத்தார் சங்கரய்யா. ஆனால், அந்த காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

1941ல் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டனர். அதனைக் கண்டித்து அமெரிக்கன் கல்லூரியில் கூட்டம் நடத்தி, பேசினார் சங்கரய்யா. முடிவில் பிப்ரவரி 28ஆம் தேதி காலையில் காவல்துறை ஆய்வாளர் தீச்சட்டி கோவிந்தனால் சங்கரய்யாவும் கைது செய்யப்பட்டார்.

பி.ஏ. தேர்வுக்கு 15 நாட்களே இருந்த நிலையில் அவர் கைதுசெய்யப்பட்டதால், அவர் படிப்பைத் தொடர முடியாது போயிற்று. மதுரைச் சிறையிலிருந்து வேலூர் சிறைக்கு மாற்றப்பட்ட சங்கரய்யா 1942 ஜூன் மாதம் விடுதலை செய்யப்பட்டார். ஜூலை மாதம் கம்யூனிஸ்ட் கட்சி மீதான தடை நீக்கப்பட்டது.

கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாட்டில் வெளிப்படையாக தன் செயல்பாட்டைத் தொடங்கியது. இதையடுத்து பல கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர். திருநெல்வேலி மாணவர் கிளர்ச்சியில் பங்கேற்றதற்காக

சங்கரய்யா கைதுசெய்யப்பட்டு வேலூர் சிறைக்கு அனுப்பப்பட்டார். அங்கிருந்து கண்ணனூர் சிறைக்கும் பிறகு தஞ்சாவூர் சிறைக்கும் மாற்றப்பட்ட சங்கரய்யா 1944ல் விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையாகி வந்த சில நாட்களிலேயே, கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாவட்டக் குழுவின் தலைவராக சங்கரய்யா தேர்வானார். இதற்குப் பிறகு, ஆங்கிலேய அரசால் தொடரப்பட்ட மதுரைச் சதி வழக்கில் சங்கரய்யா சேர்க்கப்பட்டார். இந்த வழக்கில் கைதுசெய்யப்பட்ட சங்கரய்யா 8 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இது பொய் வழக்கு என்பதை நிரூபித்து, 1947 ஆகஸ்ட் 14ஆம் தேதி இரவு, அதாவது இந்திய சுதந்திரத்திற்கு முதல் நாள் சங்கரய்யா விடுவிக்கப்பட்டார்.

இதற்கு சில நாட்களுக்குப் பிறகு ஆசிரியையான நவமணியைத் திருமணம் செய்தார் சங்கரய்யா.

இதற்கிடையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பல மாநிலங்களில் தடை செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் தடைசெய்யப்படுவதற்கு முன்பாகவே கைது நடவடிக்கைகள் துவங்கின. சங்கரய்யா தலைமறைவானார். சுமார் இரண்டு ஆண்டு காலம் தலைமறைவாக இருந்தபடி, மாறுவேடம் பூண்டு கட்சிப் பணியை மேற்கொண்டார் சங்கரய்யா.

1948-51ல் மதுரை மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி மீதான அடக்குமுறை கடுமையாக இருந்தது. பலர் கொல்லப்பட்டனர். பாலு தூக்கிலிடப்பட்டார். ஐ.வி. சுப்பய்யா சிறையில் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்தார். 1950ல் உமாநாத் இருந்த தலைமறைவு மையம் கண்டுபிடிக்கப்பட்டு, உமாநாத், பாப்பா, கல்யாணசுந்தரம் போன்றவர்கள் கைது செய்யப்பட்டனர். 1951ல் சங்கரய்யாவும் கைதுசெய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். 6 மாதத்திற்குப் பிறகு விடுதலை செய்யப்பட்ட சங்கரய்யா, முதல் பொதுத் தேர்தலுக்கு கட்சியைத் தயார் செய்வதில் தீவிரமானார். இந்தத் தேர்தலில் மதுரை வடக்குத் தொகுதியில் பி. ராமமூர்த்தி வெற்றிபெற்றார்.

1957ல் நடந்த பொதுத் தேர்தலில் மதுரை கிழக்குத் தொகுதியில் போட்டியிட்டார் சங்கரய்யா. ஆனால், வெற்றிகிடைக்கவில்லை.

1962ஆம் ஆண்டு தேர்தலிலும் அதே தொகுதியில் போட்டியிட்டாலும் வெற்றி கிடைக்கவில்லை. இதற்குப் பிறகு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் யுத்தம் மூண்டபோது, கம்யூனிஸ்ட் தலைவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டனர். சங்கரய்யாவும் கைதுசெய்யப்பட்டார். ஆறு மாதங்களுக்குப் பிறகே அவர் விடுவிக்கப்பட்டார்.

1963ல் மார்க்சிய - லெனினியப் பார்வையோடு 'தீக்கதிர்' நாளேடு வெளியாக ஆரம்பித்தது. சங்கரய்யா, பி. ராமமூர்த்தி உள்ளிட்டோரின் கட்டுரைகள் புனைப்பெயரில் வெளியாக ஆரம்பித்தன. இந்த கட்டத்தில் கட்சி, தி.மு.கவுக்கு எதிராக காங்கிரசுடன் கூட்டணி சேர முடிவெடுத்தது. இதனை சங்கரய்யா உள்ளிட்டோர் கடுமையாக எதிர்த்தனர்.

1964ல் நடந்த தேசிய கவுன்சில் கூட்டத்தில் கட்சி இரண்டாக உடைந்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உருவானது. மாநிலக் குழுவில் சங்கரய்யா இடம்பெற்றார். 1965ல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை அரசு கைது செய்யத் துவங்கியது. இதில் சங்கரய்யாவும் கைதானார். 16 மாத கால சிறைவாசத்திற்குப் பிறகு 1966ல் அவர் விடுதலை செய்யப்பட்டார். அவர் விடுதலையான பிறகு, தீக்கதிர் கட்சியின் அதிகாரபூர்வ ஏடாக அங்கீகரிக்கப்பட்டது. என். சங்கரய்யா அதன் ஆசிரியரானார்.

1967ல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட சங்கரய்யா, மதுரை மேற்குத் தொகுதியிலிருந்து வெற்றி பெற்றார். சட்டமன்ற துணைத் தலைவராகவும் தேர்வானார். 1967ல் திருவாரூரில் நடந்த விவசாயிகள் சங்க மாநில மாநாட்டில், சங்கரய்யா மாநிலச் செயலராக தேர்வு செய்யப்பட்டார். 1969ல் மாநிலத் தலைவராகவும் தேர்வானார். 1982, 91லும் விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவராக சங்கரய்யா தேர்வுசெய்யப்பட்டார். இந்த காலகட்டங்களில் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று கூட்டங்களிலும் போராட்டங்களிலும் பங்கேற்றார் சங்கரய்யா.

1977லிலும் 1980லும் நடந்த தேர்தல்களில் மதுரை கிழக்குத் தொகுதியிலிருந்து தேர்வுசெய்யப்பட்ட சங்கரய்யா, கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவராகவும் செயல்பட்டார். தமிழ்நாடு சட்டமன்றத்தில் பல்வேறு பிரச்னைகள் குறித்துப் பேசிய சங்கரய்யா, மக்கள் மீது விதிக்கப்படும் வரிகளைக் குறைக்கும்படி தொடர்ந்து வலியுறுத்தினார்.

1986ஆம் ஆண்டில் கல்கத்தாவில் நடந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 12வது மாநாட்டில் கட்சியின் மத்தியக் குழுவிற்குத் தேர்வுசெய்யப்பட்டார் சங்கரய்யா. அப்போதிலிருந்து தொடர்ந்து மத்தியக் குழுவில் இருந்து வருகிறார் அவர்.

1995ல் கடலூரில் நடந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டில், என். சங்கரய்யா கட்சியின் மாநிலச் செயலராகத் தேர்வு செய்யப்பட்டார். 2002ஆம் ஆண்டு பிப்ரவரிவரை அவர் அந்தப் பொறுப்பில் இருந்தார்.

என். சங்கரய்யா - நவமணி தம்பதிக்கு இரண்டு மகன்களும் ஒரு மகளும் இருக்கின்றனர். நான்கு பேரன்களும் மூன்று பேத்திகளும் உள்ளனர்.

**-முரளிதரன் காசிவிஸ்வநாதன்**
பிபிசி தமிழ்


## கொவிட் அச்சம்: உலகெங்கும் பங்குச் சந்தைகளில் வீழ்ச்சி

அதிகரித்து வரும் கொரோனாவால் பொருளாதார மீட்சியை பாதிக்கும் என்ற அச்சத்திற்கு மத்தியில் உலகெங்கும் பங்குச் சந்தைகள் வீழ்ச்சி கண்டுள்ளன.

ஆசியாவில், ஜப்பானின் Nikkei 224 சுட்டெண் தரநிலை 1 வீதத்திற்கு மேல் வீழ்ச்சி கண்டு கடந்த ஆறு மாதங்களில் தனது குறைந்த நிலையை பதிவு செய்தது. நியூயோர்க்கில், Dow Jones Industrial Average, 2 வீதத்திற்கு மேல் வீழ்ச்சி கண்டிருக்கும் அதேவேளை, பிரிட்டனிலும் ஐரோப்பாவிலும் பங்குச் சந்தைகளில் சரிவு ஏற்பட்டுள்ளது. கொரோனா தொற்றின் தீவிரத்தன்மை கொண்ட டெல்டா திரிபு பற்றி அச்சத்திற்கு மத்தியில் பல நாடுகளில் நோய்த் தொற்றும் அதிகரித்துள்ளது.

சர்வதேச நிலவரங்களை ஒட்டி இந்திய பங்குச் சந்தைகள் திங்கட்கிழமை வர்த்தகத்தில் கடும் சரிவை சந்தித்தன. Sensex 587 புள்ளிகளை இழந்து முதலீட்டாளர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

# ஸ்டேன் ஸ்வாமி மரணம்... அழியாக்கறை.. ஆயுள் பழி!



1937ஆம் ஆண்டு ஏப்ரல் 26ந் திகதி தமிழகத்தின் திருச்சியில் பிறந்தார் ஸ்டேன் சுவாமி (Stan Swamy).

1970களில் இறையியல் படிப்பை முடித்த அவர் ஃபிலிப்பைன்ஸில் சமூகவியல் மேல் படிப்பை முடித்தார். அங்கு ஆளும் நிர்வாகத்துக்கு எதிராக நடந்த பல்வேறு போராட்டங்களில் அவர் பங்கெடுத்தார். அதன் பிந்தைய ஆண்டுகளில் பிரேசிலிய கத்தோலிக்க பேராயர் ஹெல்டர் காமராவின் (Hélder Câmara) வறியநிலை மக்களுக்கான சேவையால் ஈர்க்கப்பட்ட அவர் தாயகம் திரும்பியதும் பல்வேறு சமூக பணிகளை தொடர்ந்தார்.

1975 முதல் 1986ஆம் ஆண்டுவரை அவர் பெங்களூரில் உள்ள இந்திய சமூகவியல் நிறுவனத்தின் இயக்குநராக இருந்தார். பழங்குடியின ஆலோசனை கவுன்சிலை அமைக்க அரசியலமைப்பின் ஐந்தாவது அட்டவணையில் உள்ள அம்சங்களை செயல்படுத்தாதது குறித்து அவர் கேள்வி எழுப்பினார்.

இதன் பிறகு, பழங்குடியின மக்கள் அதிகம் வாழும் ஜார்கண்ட் மாநிலத்தில் தொலைதூர காடுகளில் வாழும் மக்களின் நில உரிமைகளுக்காக குரல் கொடுத்தார். அங்கேயே இறை பணியையும் அவர் மேற்கொண்டார். உள்ளூர் மக்களால் 'அப்பா' என்று அன்புடன் அழைக்கப்பட்டு வந்த அவர், பழங்குடியின உரிமைகளுக்கு இடைவிடாமல் குரல் கொடுத்து வந்ததால் பழங்குடியின மக்களின் ஆதரவைப் பெற்றார். அவர்களிடையே செல்வாக்கு மிக்க நபராகவும் அறியப்பட்டார்.

இந்த நிலையில், 2017ஆம் ஆண்டு டிசம்பர் 31ந் திகதி மகாராஷ்டிராவின் புனேவில் நடந்த மாநாட்டில் இவர் ஆற்றிய உரை, மறுநாள் மேற்கு மகாராஷ்டிராவின் பீமா கோரேகான் நினைவிடத்தில் வன்முறையை தூண்டும் வகையில் இருந்ததாகக் கூறி தேசிய புலனாய்வு அமைப்பால் (N.I.A) கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு எல்கர் பரிஷாத் வழக்கு என்று அழைக்கப்படுகின்றது. ஸ்டேன் சுவாமி பங்கேற்ற மாநாடு, மாவோயிஸ்டுகளுடன் தொடர்புடையவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டதாக காவல்துறை கூறியுள்ளது.

"தங்களுக்குத் தொடர்பில்லாத பொய் வழக்குகளில் பழங்குடியினர் கைதுசெய்யப்படுவதை எதிர்த்து வாழ்நாள் முழுக்கப் போராடிய ஸ்டேன் சுவாமி, தனக்குத் தொடர்பில்லாத வழக்கு ஒன்றில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் இருந்தபோது இறந்தது துயரம்'' என வேதனைப்படுகிறார் வழக்கறிஞர் பீட்டர் மார்ஜின். ''இது ஸ்டேன் சுவாமியின் மறைவு அல்ல. இந்தியாவில் நீதிமன்ற நடைமுறைகள் செத்துப்போய்விட்டன. இந்திய அரசியலமைப்புச் சட்டம் இறந்துவிட்டது. அதற்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள்'' என்று கொதிக்கிறார் மனித உரிமைச் செயற்பாட்டாளர் கவிதா கிருஷ்ணன். பீமா கோரேகாவ் வழக்கில் கைதுசெய்யப்பட்டு மும்பை தலோஜா சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஸ்டேன் சுவாமி, உடல்நலக் கோளாறுகளால் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது ஜூலை 5ந திகதி இறந்தார். இந்திய தேசமெங்கும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருக்கிறது இந்த மரணம்.

84 வயது ஸ்டேன் சுவாமியை சில தினங்களுக்கு முன்பு சிறையில் பரிசோதித்த மருத்துவக்குழு, 'அவர் கை கால்கள் மோசமாக நடுங்குகின்றன. அவரால் இயல்பாகத் தண்ணீர் குடிக்க முடியாது. தனக்கான உணவைக் கைகளால் எடுத்துச் சாப்பிட முடியாது. கைத்தடி அல்லது சக்கர நாற்காலி உதவியின்றி நகர முடியாது. அவருக்கு இரண்டு காதுகளும் சுத்தமாகக் கேட்கவில்லை' என அறிக்கை கொடுத்தது.

இவரைத்தான் தடை செய்யப்பட்ட மாவோயிஸ்ட் குழுவுடன் இணைந்து வன்முறை சதித்திட்டங்களை அரங்கேற்றினார், நாட்டில் கலவரத்தைத் தூண்ட முயன்றார் எனப் பல்வேறு குற்றங்களைச் சாட்டி, சட்டவிரோத நடவடிக்கைகள் தடைச் சட்டம் எனப்படும் UAPA (Unlawful Activities Prevention Act) சட்டத்தில் கைது செய்தது தேசிய புலனாய்வு அமைப்பு.

***கார்த்தி***

மராட்டிய பேஷ்வா படைகளை, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் படையிலிருந்த தலித்துகள் வெற்றிகொண்ட இடம், மகாராஷ்டிர மாநிலத்தின் பீமா கோரேகாவ். இதன் 200வது ஆண்டு விழாவில் கலவரங்கள் நடைபெற்றன. இதை தேசவிரோத நடவடிக்கையாகக் கருதி, தேசியப் புலனாய்வு அமைப்பு வழக்கு பதிவு செய்து விசாரணையை ஆரம்பித்தது. 2018 ஆம் ஆண்டு முதல் கைதுப்படலம் தொடங்கியது. சமூகச் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள் என்று பலர் குறிவைக்கப்பட்டனர். சுரேந்திர காட்லிங், ரோமா வில்சன், மகேஷ் ராவத், ஷோமா சென், வரவர ராவ், சுதா பரத்வாஜ், கௌதம் நவ்லகா, அருண் ஃபெரைரா என்று பலர் UAPA சட்டத்தில் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தப் பட்டியலில் 15வது நபராகக் கைதுசெய்யப்பட்டார், பாதிரியார் ஸ்டேன் சுவாமி. தான் ஒருமுறை கூட பீமா கோரேகாவ் சென்றதில்லை என அவர் பலமுறை சொல்லியும் பயனில்லை. இந்தியாவில் UAPA சட்டத்தில் கைதான மிக மூத்த நபர் ஸ்டேன் சுவாமிதான்.

''எனக்கு இங்கு நடந்துகொண்டிருப்பவை, எனக்கு மட்டுமே பிரத்யேகமாக நடப்பவை அல்ல. இந்தியா முழுக்க இது நடந்துகொண்டிருக்கிறது. அறிவுசார் தளத்தில் செயல்படுபவர்கள், வழக்கறிஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், போராளிகள் எனப் பலர் சிறைக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் செய்த காரியம், அதிகார வர்க்கத்தின் துஷ்பிரயோகங்களைக் கேள்வி கேட்டதுதான். இதில் என்னையும் இணைத்துக்கொண்டதில், நான் பெருமைப்படுகிறேன். நான் அமைதியாக இருக்கப்போவதில்லை. இந்த விளையாட்டுக்கான விலை எதுவாயினும் அதை நான் கொடுக்கத் தயார்.''

கைதாவதற்கு இரண்டு தினங்கள் முன்பு ஸ்டேன் பேசிய வார்த்தைகள் இவை. 'ஏர்பன் நக்சல்', 'ஆன்ட்டி நேஷனல்' என்றெல்லாம் குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் பாதிரியார் ஸ்டான் லூர்துசாமி, திருச்சி அருகேயுள்ள விரகலூரில் பிறந்தவர். இறையியலும் சமூகவியலும் படித்த பாதிரியாரான இவர், ஜார்க்கண்ட் மாநிலத்தின் அடையாளமாக மாறினார். ஆதிவாசிகள் இவரைக் கொண்டாடுவதற்குக் காரணங்கள் இல்லாமலும் இல்லை. ஜார்க்கண்டில் போலிக் குற்றச்சாட்டுகளில் சிறைப்பட்டு நிற்கும் ஆதிவாசிகளைப் பற்றி ஆய்வு மேற்கொண்டார் ஸ்டேன்.

ஜார்க்கண்டில் சுரங்கங்கள், தொழிற்சாலைகள், புதிய நகரங்கள், அணைகள் என உருவாக்கப்பட வேண்டிய சூழலில் பூர்வகுடிகள் இடமாற்றம் செய்யப்பட்டனர். அப்படி இடம்மாற்றப்பட்ட பழங்குடிகளுக்குச் சிறிதளவு இழப்பீட்டுத் தொகையே வழங்கப்பட்டது. தங்களின் நிலம் கையகப்படுத்தப்பட்டு, நியாயமான இழப்பீடுகள் எதுவுமின்றி கையறு நிலையில் இருக்கும் அந்த மனிதர்களின் பக்கம் நின்றவர் ஸ்டேன் சுவாமி. இவர்களின் நியாயமான இழப்பீட்டு உரிமை, புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றம் ஆகியவற்றுக்காகப் போராடினார் ஸ்டேன். குரலற்றவர்களின் குரலாக ஒலித்தவர். ''நான் இது குறித்தெல்லாம் பேசாமல் இருக்கவே என்னைக் கைதுசெய்திருக்கிறார்கள்'' என்றார் ஸ்டேன்.

வாழ்வின் கடைசி காலங்களில், சில துணிகள், புத்தகங்கள், பாடல் கேசட்டுகள், ஒரு லேப்டாப் ஆகியவைதான் ஸ்டேனின் சொத்தாக இருந்தன. ராஞ்சியின் ஓர் ஆசிரமத்தில் சிறிய அறையில் இருந்துவந்தார் ஸ்டேன். சிறைக்குள் கொண்டுவரப்பட்டபோது, பார்க்கின்சன் (Parkinson) நோயால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தார். சிறப்பு நீதிமன்றத்தில் முதன்முறை விசாரணைக்கு வந்தபோது, கை நடுக்கத்தின் காரணமாக அவரால் கையெழுத்திட முடியவில்லை. நீதிமன்றம் வேறு வழியின்றி கைநாட்டைத்தான் பெற்றது. முதுமையில் நோய்களால் பாதிக்கப்பட்டு சிறையில் தவித்தபோது, ஸ்டேன் சுவாமிக்கு இடைக்கால ஜாமீன் கேட்கப்பட்டது. ''கொரோனா காலத்தைப் பயன்படுத்தி தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார். இந்தக் காரணங்களையெல்லாம் பொருட்படுத்தத் தேவையில்லை'' என்றது தேசியப் புலனாய்வு அமைப்பு. இதை நீதிமன்றமும் ஏற்றது.

கைதுசெய்யப்பட்ட பிறகு ஒருநாள்கூட இவரைக் காவலில் எடுத்து தேசியப் புலனாய்வு அமைப்பு விசாரிக்கவில்லை. எதற்காக இவர் சிறையில் இருக்க வேண்டும் என்ற கேள்விக்கான பதிலும் அவர்களிடம் இல்லை.

சிறையில் உடல்நிலை மோசமான நிலையில் ஸ்டேன் சுவாமி ஜாமீன் கேட்டார். நீதிமன்றத்தில் இதற்கு பதில் தர இரண்டு மாதங்கள் எடுத்துக்கொண்டது தேசியப் புலனாய்வு அமைப்பு. இந்தத் தாமதமும் சேர்ந்து அவரைக் கொன்றிருக்கிறது. அவரைச் சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கூட்டிச் செல்ல நீதிமன்றம் அனுமதித்தபோது, ''எனக்குத் தேவை ஜாமீன்தான். அதைத் தர முடியாவிட்டால் என்னை மருத்துவமனைக்கு அனுப்பாதீர்கள். நான் சிறையில் இருந்தபடி செத்துப்போகிறேன்'' என வேதனையுடன் சொன்னார் ஸ்டேன் சுவாமி. அந்த மருத்துவமனையிலேயே அவர் வாழ்வு முடிந்திருக்கிறது.

தடா, பொடா சட்டங்கள்போலவே UAPA சட்டமும் இந்தியாவில் தவறாகப் பயன்படுத்தப்படுவதாகக் குரலெழுப்புகிறார்கள் மனித உரிமை ஆர்வலர்கள். ''எதிர்க்குரல் எழுப்புவதும், அரசின் செயல்களுக்கு எதிராகப் போராடுவதும் ஜனநாயக உரிமைகள். இதைச் செய்பவர்களையே விரோதிகளாக நினைக்கிறது அரசு. இவர்களை UAPA சட்டத்தில் கைது செய்வதன் மூலம், எதிர்காலத்தில் யாரும் போராடும் எண்ணத்துடன் வீதிக்கு வரக் கூடாது என நினைக்கிறது மத்திய அரசு'' என்கிறார்கள் அவர்கள்.

UAPA சட்டத்தில் கைதாகும் ஒருவருக்கு ஜாமீன் கிடைப்பதே கடினம். விசாரணை முடிய எத்தனை ஆண்டுகள் ஆனாலும், அவர் சிறையில் வாட வேண்டும். தேசியப் புலனாய்வு அமைப்பு எந்த விசாரணையையும் விரைந்து முடிப்பதில்லை. நீதிமன்றங்கள் ஒருகட்டத்தில் பொறுமை இழந்து ஜாமீன் கொடுக்கின்றன. குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிராக அஸ்ஸாமில் போராடிய அகில் கோகோய், டெல்லியில் போராடிய மாணவர்கள் மூன்று பேர் ஆகியோருக்குச் சமீபத்தில் ஜாமீன் கிடைத்தது. பெங்களூரு கலவரத்தில் கைதான 115 பேர் விடுவிக்கப்பட்டார்கள். ஸ்டேன் சுவாமி போலவே இதே வழக்கில் கைதான வரவர ராவ் மருத்துவ ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். இந்த வழக்கில், 60 வயது தாண்டிய இன்னும் ஐந்து பேர் சிறையில்தான் இருக்கிறார்கள்.

'எல்லாவற்றையும் தாண்டி ஒருவரின் பிறப்பிலும் இறப்பிலும் கண்ணியம் காக்கப்பட வேண்டும்' என்பார் 80 வயதான வரவர ராவ். ஸ்டேனுக்கு மறுக்கப்பட்ட கண்ணியமும் நியாயமும் மற்ற சிறைக் கைதிகளுக்காவது கிடைக்க வேண்டும். 'நீதிமன்றங்கள்தான் ஜாமீன் மனுக்களைத் தள்ளுபடி செய்தன' என இரத்தக் கறைகளை கைகழுவ நினைக்கிறது மத்திய அரசு. இது அழியாக்கறை. அரசும், நீதிமன்றமும், காவல்துறையும் இணைந்து சுமக்கப்போகும் ஆயுள் பழி. ஸ்டேனின் மரணத்தின் கறைகளைச் சுமக்கப்போவது அரசுகள் மட்டுமல்ல, மௌனித்து இதைக் கடந்து செல்லும் ஒவ்வொரு இந்தியரும்தான்.

**முன்பக்கத்தொடர்ச்சி...**

இலங்கை உலகிலேயே மிக மோசமான ஒரு பயங்கரவாத பாசிஸ இயக்கத்தை தோற்கடித்ததை இந்த சக்திகள் வரவேற்று போரற்ற இலங்கையின் வளர்ச்சிக்கு உதவுவதற்குப் பதிலாக இந்த சக்திகள் இலங்கையை சாண் ஏற முழம் சறுக்கும் நிலைமைக்குத் தள்ளி விட்டுள்ளன. இந்தச் சக்திகளின் இந்த தீய நாடகம் கொவிட் நோய்த் தொற்றுக்கு முன்னரே அரங்கேற்றப்பட்டது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கை மீதான மேற்கத்தைய நாடுகளின் வன்மப் போக்கிற்கு இன்னொரு காரணம், இலங்கை சீனாவுடன் நெருக்கமான உறவுகளை வைத்திருப்பதாகும். ஆனால் இலங்கை – சீன உறவு என்பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அதற்கு 2000 ஆண்டு வரலாற்றுப் பாரம்பரியம் உண்டு. நவீன வரலாற்றில் அது 1952இல் ஏற்பட்ட இரு நாடுகளுக்குமிடையிலான அரிசி - இறப்பர் ஒப்பந்தத்தின் மூலம் புது மெருகூட்டப்பட்டது. பின்னர் அது 1956இல் பண்டாரநாயக்க அரசாங்கம் சீனாவுடன் இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்த பின்னர் முழு வீச்சை அடைந்தது. அன்றிலிருந்து ஆபத்தான நேரங்களில் முதலில் ஓடி வந்து இலங்கைக்கு உதவும் நாடாக சீனா இருந்து வருகிறது.

ஆனால் அன்றைய காலகட்டத்தை விட இன்று இலங்கை – சீன உறவுகளை மேற்கு நாடுகளும் இந்தியாவும் வெறுக்கக் காரணம், அன்றைய சீனா வளர்ச்சியை நோக்கி நின்ற ஒரு ஏழ்மை நாடாக இருந்தது. சீனா ஒருபோதும் வளர்ச்சியடையாது சோசலிசத்தை வாயளவில் பேசிக்கொண்டிருக்கும் ஒரு ஏழை நாடாகவே இருக்கும் என்றுதான் மேற்குலகு கணக்குப் போட்டிருந்தது. ஆனால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தீர்க்கதரிசனமிக்க தலைமை சீனாவின் வரலாற்றை மாற்றியமைத்து உலகின் இரண்டாவது சக்தி வாய்ந்த நாடாக மாற்றிய பின்னர்தான் மேற்கத்தைய முதலாளித்துவ உலகம் துடிதுடித்து வழித்துக் கொண்டது.

இது நெப்போலியன் ஒருமுறை சொன்னதாகக் கூறப்படும் "சீனம் உறங்குகிறது. அது உறங்கட்டும். அது விழிக்கும்போது உலகம் நடுங்கும்" என்ற கூற்றைத்தான் நினைவூட்டுகிறது.

சீனா முழு மேற்கத்தைய முதலாளித்துவ உலகிற்கும் சவாலாக எழுந்து நிற்பதும், அதனுடன் முன்னாள் சோவியத் சோசலிச நாடான இன்றைய ரஸ்யா கைகோர்த்து நிற்பதும், முழு முதலாளித்துவ உலகையும் கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது. அத்தகைய அணியில் இலங்கையும் சேர்ந்திருக்கிறது என்ற எரிச்சலே இலங்கை மீதான மேற்குலகின் வெறுப்புக்குக் காரணம்.

பாசிஸ புலிகளை ஒழித்துக்கட்டியதும், சர்வதேச அரங்கில் இலங்கை ஏகாதிபத்திய எதிர்ப்பில் முடியுமானவரை இணைந்து நிற்பதும் நல்ல விடயங்கள்தான். ஆனால் இவை மட்டும் ஒரு நாட்டில் வெற்றிகரமான ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்குப் போதுமானவை அல்ல என்பதையும் சற்றுப் பாரதூரமாக எடுத்து நோக்க வேண்டும்.

இன்றைய இலங்கை அரசாங்கத்தின் மீது மேற்கத்தைய முதலாளித்துவ நாடுகளும் அவர்களுக்கு சேவகம் செய்யும் இலங்கையின் முதலாளித்துவ எதிர்க்கட்சிகள் மற்றும் ஊடகங்கள் என்பனவும் தினசரி பலவிதமான குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகின்றன. அவற்றில் பல பொய்யான குற்றச்சாட்டுகள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனாலும் இலங்கையின் தற்போதைய அரசு கவனத்தில் கொள்ள வேண்டிய பின்வரும் விடயங்கள் இருக்கின்றன. அவையாவன:

○ மக்கள் பிரதிநிதிகளின் கருத்துகளுக்கு செவிமடுப்பதை விட அரசாங்க மேல்மட்டத்தில் உள்ள ஒரு குழுவினரின் தீர்மானங்களுக்கு அமைய செயல்படுதல்.

○ ஒரே குடும்ப வம்சத்தைச் சேர்ந்த பல பேர் அரசாங்க உயர் பதவிகளை வகிப்பதன் மூலம் குடும்ப வாரிசு அரசியல் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது என்ற தோற்றப்பாட்டை மக்கள் மத்தியில் ஏற்படுத்தல்.

○ சிறுபான்மை இன – மத பகுதியினரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறையற்று இருத்தல்.

○ அரசாங்கத்தில் முன்னாள் இன்னாள் இராணுவ அதிகாரிகளின் அதீத பிரசன்னம்.

○ நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட சில தீர்ப்புகளை சரியான வழிமுறையின்றி அதிகாரத்தைப் பயன்படுத்தி மாற்றியமைத்தல்.

○ விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தும் பொறிமுறையொன்றை இன்னமும் வகுக்காதிருத்தல்.

○ அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை ஜனநாயக கலந்துரையாடல்களின் மூலம் தீர்க்காமல் பலம் வாய்ந்த பகுதியினர் 'பெரியண்ணன்' மனோபாவத்தில் செயல்படுதல்.

இப்படிப் பலவற்றைக் குறிப்பிடலாம்.

இந்த விடயங்களில் அரசாங்கம் கவனம் செலுத்தித் தீர்க்காதுவிடின், மீண்டும் ஒரு '2015' நிலைமை ஏற்படுவதற்கு அரசாங்கமே வழிவகுத்துக் கொடுத்ததாக முடிந்துவிடும் என்பதை ஜனநாயக – தேசபக்த சக்திகளின் சார்பாகச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

## ஐரோப்பாவில் 'கொரோனா' 50 மில்லியனைத் தாண்டியது

ஐரோப்பாக் கண்டத்தில் கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 50 மில்லியனைத் தாண்டியுள்ளது.

ஒரு கண்டத்தில் 50 மில்லியனுக்கும் அதிகமானோர் கொவிட்–19 நோய்த்தொற்றால் பாதிக்கப்படுவது இதுவே முதல்முறை. வேகமாகப் பரவக்கூடிய தன்மை கொண்ட டெல்டா வகைக் கொரோனா வைரஸ் அங்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

டெல்டா வைரஸ் இப்போது 100க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ளது. ஐரோப்பாவில் சுமார் 8 நாளுக்கு ஒருமுறை 1 மில்லியன் பேருக்குப் புதிதாக நோய்த்தொற்று ஏற்படுகிறது.

ஐரோப்பிய கண்டத்தில் நோய்த்தொற்றால் இதுவரையில் 1.3 மில்லியன் பேர் உயிரிழந்துள்ளனர். உலக அளவில் நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் 27 வீதத்தினர் ஐரோப்பாக் கண்டத்தினர். நோய்த்தொற்றால் உலக அளவில் உயிரிழந்தவர்களில் 31 வீதத்தினர் ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள்.

நோய்த்தொற்றால் மிக மோசமாக பாதிக்கபட்ட ஐரோப்பிய நாடாக ரஷ்யா உள்ளது. அங்கு நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 6 மில்லியனாவும், இறந்தவர்களின் எண்ணிக்கை ஒன்றரை இலட்சமாகவும் உள்ளது.

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும்!



உலகம் முழுவதும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் முயற்சிகள் அதிகரித்து வருகின்றன. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஏனெனில், விவசாய உற்பத்திகளைப் பெருக்கவும், விவசாய உற்பத்திப் பொருட்களை கொள்ளை இலாபம் ஈட்டும் ஒரு துறையாகப் பயன்படுத்தவும் முதலாளித்துவ நிறுவனங்கள் செயற்கை பசளைகளையும், கிருமிநாசினி வகைகளையும் பல்வேறு வடிவங்களிலும் அளவுகளிலும் அறிமுகப்படுத்தின.

ஆனால் இந்த செயற்கை பசளைகள் கிருமிநாசினி என்பனவற்றில் மனித உடலுக்கும் விலங்கினங்களுக்கும் தீங்கு விளைவிக்கும் பல நச்சு இரசாயனப் பொருட்கள் அடங்கி இருப்பதால் அவற்றைப் பயன்படுத்தி விளைவித்த தானிய வகைகள், காய்கறிகள், பழ வகைகள், கிழங்குகள் என்பனவற்றை உண்பவர்களுக்கு பலவிதமான புதிய புதிய நோய்கள் உருவாகத் தொடங்கின. சில நோய்கள் தீர்க்க முடியாத அளவுக்கு வலுவானதாக மாறி உயிர்களுக்கே உலை வைத்தது. இந்த செயற்கை இரசாயனப் பொருட்களைத் தயாரித்த கொம்பனிகளே அவற்றின் காரணமாக உருவாகும் நோய்களுக்கும் இரசாயன மருந்து வகைகளைக் கண்டுபிடித்து இலாபமும் ஈட்டி வருகின்றன.

இந்த அபாயகரமான நிலைமையை காலப்போக்கிலேயே மக்களால் உணர முடிந்தது. அதனால் பலரும் இயற்கை விவசாய முறையில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களையே வாங்கி உண்பதற்கு நாட்டம் கொண்டனர். ஆரம்பத்தில் இயற்கை விவசாய முறையில் உற்பத்தி செய்வது சற்றுக் கடினமாக இருந்தாலும் காலப்போக்கில் பல விவசாயிகள் அதில் தேர்ச்சி பெற்றனர். விவசாயிகள் அல்லாத மக்கள் கூட தமது வீட்டுக் காணிகளிலும், மாடி விடுகளில் வசிப்பவர்கள் சிறு சிறு தொட்டிகளிலும் இயற்கை முறையில் தமக்கான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளனர்.

இலங்கையிலும் தற்போதைய அரசாங்கம் செயற்கை பசளையை படிப்படியாக நீக்கி இயற்கை முறையில் உற்பத்தி செய்யும் பசளை வகைகளை பயன்படுத்த விவசாயிகளை ஊக்குவிக்கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இது நல்ல ஆரம்பம். ஆனால் இரசாயன பசளை மற்றும் கிருமிநாசினிகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து கொள்ளை இலாபம் ஈட்டும் சில வர்த்தக நிறுவனங்கள் அரசாங்கத்தின் முயற்சிக்கு எதிராக விவசாயிகளைத் தூண்டிவிட்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட வைத்துள்ளனர். எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் அரசாங்கம் முன்வைத்த காலைப் பின்வைகக்கூடாது.

***சிவநேசன்***

செயற்கை பசளை மற்றும் கிருமிநாசினி வகைகளின் அதீத பாவனையால் மண்ணும் நீரும் காற்றும் மாசடைந்து மக்களுக்கு பலவிதமான வியாதிகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக நெற்செய்கையில் ஈடுபடும் இலங்கையின் பெரும்பாலான மாவட்டங்களில் மக்களுக்கு சிறுநீரக நோய் ஏற்பட்டுள்ளது. அந்த நோயிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது சொந்த ஊரான அதிக நெல் விளைவிக்கப்படும் பொலநறுவவில் சீன அரசாங்கத்தின் உதவியுடன் பிரமாண்டமான சிறுநீரக நோய் சிகிச்சைக்கான வைத்தியசாலை ஒன்றை நிர்மாணித்துள்ளார். உண்மையில் நோய் வந்த பின்னர் வைத்திய சிகிச்சை செய்து பணத்தையும் காலத்தையும் விரயம் செய்வதை விட அந்த நோய் வராமல் தடுப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை முன்னரே எடுத்திருக்க வேண்டும்.

இலங்கையில் சுமார் 60 – 70 ஆண்டுகளுக்கு முன்னர் பெரும்பாலான விவசாயிகள் செயற்கை பசளையையோ கிருமிநாசினியையோ பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபடவில்லை. குறிப்பாக அதிகளவில் உப உணவுச் செய்கையில் ஈடுபட்ட வட பகுதி விவசாயிகள் பசளையாக மாடு மற்றும் ஆடுகளின் எருவையும், இலை தழைகளையும் பயன்படுத்தியே விவசாயத்தில் ஈடுபட்டதுடன், ஆரோக்கியமான உணவுப் பொருட்களையும் வெற்றிகரமாக உற்பத்தி செய்தனர். அந்தப் பொற்காலத்தை மீண்டும் படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்.

இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் பிரச்சாரம் செய்தால் மட்டும் போதாது. முதலில் கிராமிய மட்டங்களில் அது பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். அத்துடன் நின்றுவிடாது இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதன் பொருட்டு நாட்டின் 9 மாகாணங்களிலும் இயற்கை விவசாயத்தை மேம்படுத்துவதற்கான விவசாயப் பல்கலைக்கழகங்களை அமைப்பதுடன், மாவட்டம் தோறும் இயற்கை விவசாய மாதிரிப் பண்ணைகளையும் அமைத்து மக்களுக்கு வழிகாட்டலும் ஊக்குவிப்பும் வழங்க வேண்டும். இயற்கை விவசாயத்தை ஊக்குவித்து மக்களை நோயற்றவர்களாக மாற்றுவதற்கு இது ஒன்றே வழி.

"உணவே மருந்து" என்ற முதுமொழியை மனதில் கொள்வோமாக!